# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# Annual Performance Report

# 2024

කම්කරු දෙපාර්තමේන්තුව
**தொழில் திணைக்களம்**
Department of Labour



# 2024 ஆம் ஆண்டுக்கான
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# செலவுத் தலைப்பு இலக்கம் 221

தொழில் திணைக்களம்

# பொருளடக்கம்


பக்கம்

| | | |
|---|---|---|
| **முதலாம் அத்தியாயம்**<br>**நிறுவனத் தோற்றப்பாடு / செயற்படுத்தல் சுருக்கம்** | | **6** |
| 1.1 | அறிமுகம் | 7 |
| 1.2 | நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள் | 7 |
| 1.3 | பிரதான செயற்பாடுகள் | 7 |
| 1.4 | திணைக்களத்தின் கட்டமைப்பு மற்றும் பிரதான பிரிவுகள் | 8 |
| 1.5 | திணைக்களத்தின் கீழுள்ள நிதியங்கள் | 20 |
| **இரண்டாம் அத்தியாயம்**<br>**முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு** | | **21** |
| 2.1 | தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு | 22 |
| 2.2 | கள ஆய்வுகளை நடத்துதல் | 24 |
| 2.3 | தொழில்துறை உறவு | 26 |
| 2.4 | தொழிலாளர்களை சேவையில் ஈடுபடுத்துதல் தொடர்பான உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டப் பாதுகாப்பு | 31 |
| 2.5 | தொழில் தரங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் | 32 |
| 2.6 | உழைக்கும் பெண்கள் மற்றும் இளைஞர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் குழந்தைத் தொழிலாளர் முறையை இல்லாதொழித்தல் | 34 |
| 2.7 | தொழிலாளர்களின் தொழில்சார் பாதுகாப்பிற்காக கண்ணியமான பணிச்சூழலை உறுதிப்படுத்துதல் | 39 |
| 2.8 | தொழிலாளர்களின் தொழில்சார் சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் | 41 |
| 2.9 | திணைக்களத்தின் வலைத்தளம் | 43 |
| 2.10 | திணைக்களத்தின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக நடவடிக்கைகள் | 43 |
| 2.11 | தொழில் திணைக்களத்தின் நூலகம் | 44 |
| 2.12 | தகவல் தொடர்பாடல் நடவடிக்கைகள் | 44 |
| 2.13 | திணைக்களத்தின் மனித வள முகாமைத்துவம் | 48 |
| 2.14 | திணைக்களத்தின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி | 51 |
| 2.15 | திணைக்களத்தின் செயற்பாடுகளை கண்காணிப்பதன் மூலம் இலக்குகளை நோக்கி வழிநடத்துதல் | 52 |
| 2.16 | நிதி முகாமைத்துவம் | 53 |

| | | |
|---|---|---|
| **மூன்றாம் அத்தியாயம்**<br>**2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை** | | **54** |
| 3.1 | நிதிசார் செயலாற்றுகைக் கூற்று | 55 |
| 3.2 | நிதி நிலைக் கூற்று | 56 |
| 3.3 | காசுப் பாய்ச்சல் கூற்று | 58 |
| 3.4 | நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 59 |
| 3.5 | வருமானம் சேகரிப்பதன் செயலாற்றுகை | 59 |
| 3.6 | ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துவதன் செயலாற்றுகை | 59 |
| 3.7 | நி.பி. 208 இன் படி, ஏனைய அமைச்சுகள்/திணைக்களங்களின் பிரதிநிதியாக இத் திணைகளத்திற்கு அளிக்கப்பட்ட ஏற்பாடுகள் | 60 |
| 3.8 | நிதியல்லா சொத்துக்களை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை | 61 |
| 3.9 | கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை | 62 |
| **நான்காம் அத்தியாயம்**<br>**செயலாற்றுகைச் சுட்டிகள்** | | **70** |
| 4.1 | நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டி (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்) | 71 |
| **ஐந்தாம் அத்தியாயம்**<br>**நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்துகொள்வதன் செயலாற்றுகை** | | **72** |
| 5.1 | இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் | 73 |
| 5.2 | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதன் சாதனைகள் | 74 |
| 5.3 | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் உள்ள சவால்கள் | 81 |
| **ஆறாம் அத்தியாயம்**<br>**மனித வள தோற்றப்பாடு** | | **82** |
| 6.1 | ஆளணி முகாமைத்துவம் | 83 |
| 6.2 | நிறுவனத்தின் செயலாற்றுகையின் மீது மனித வளப் பற்றாக்குறை அல்லது மிகை தாக்கம் செலுத்தியுள்ள விதம் | 83 |
| 6.3 | மனித வள அபிவிருத்தி | 83 |
| **ஏழாம் அத்தியாயம்**<br>**இணக்க அறிக்கை** | | **94** |
| 7.1 | இணக்க அறிக்கை | 95 |

## வரைபடங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| வரைபடம் 2.1 | 2024.01.01 முதல் 2024.12.31 வரை ஊழியர் சேமலாப நிதியத்தின் அனுகூலங்களைச் செலுத்துவதற்காக அனுப்பப்பட்டுள்ள தீர்மானக் கடிதங்களின் எண்ணிக்கை | **22** |
| வரைபடம் 2.1 | 2019 ஆம் ஆண்டு முதல் 2024.12.31 வரை, நியதிச்சட்ட உரிமை மீறல்கள் குறித்த முறைப்பாடுகள் கிடைத்தல் மற்றும் தீர்க்கப்படுதல் | **26** |
| வரைபடம் 2.2 | 2019 ஆம் ஆண்டு முதல் 2024.12.31 வரை, தொழில் பிணக்குகள்குறித்த முறைப்பாடுகள் கிடைத்தல் மற்றும் தீர்க்கப்படுதல் | **27** |
| வரைபடம் 2.4 | 2024.01.01 இலிருந்து 2024.12.31 வரைநீதவான் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிகை | **31** |


## அட்டவணைகள்


| | | பக்கம் |
|---|---|---|
| அட்டவணை 2.1 | வேலைநிறுத்தங்கள் தொடர்பில் பதிவாகிய தரவுகள் - 2024.01.01 முதல் 2024.12.31 வரை | 29 |
| அட்டவணை 2.2 | 2024.01.01 முதல் 2024.12.31 வரை பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரப் பிரிவினால் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் | 37 |
| அட்டவணை 2.3 | 2024.01.01 முதல் 2024.12.31 வரை, தொழில்துறை பாதுகாப்புப் பிரிவினால் நடத்தப்பட்ட தொழில்தருநர் தொழிலாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் விவரங்கள | 40 |
| அட்டவணை 2.4 | 2024.01.01முதல் 2024.12.31வரையிலான காலப்பகுதியில் பல்வேறு நிறுவனங்களில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் பிரச்சினையான நிலைமைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | 41 |
| அட்டவணை 2.5 | 2024.01.01 முதல் 2024.12.31வரை தொழில் சுகாதாரப் பிரிவு நடத்திய தொழில்தருநர் தொழிலாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் விவரங்கள் | 42 |
| அட்டவணை 6.1 | உள்நாட்டு பயிற்சிப் பாடநெறிகளில் பங்கேற்பு - 2024 | 84 |
| அட்டவணை 6.2 | வெளிநாட்டு பயிற்சிப் பாடநெறிகளில் பங்கேற்பு - 2024 | 92 |

## படங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| படம் 2.1 | 2024.01.01 முதல் 2024.12.31 வரை அறிவித்தல்களை அனுப்புவதன் முன்னேற்றம் | 23 |
| படம் 2.2 | ஆய்வுகளை மேற்கொள்ளல் - 2024.01.01 முதல் 2024.12.31 வரை முன்னேற்றம் | 25 |
| படம் 2.3 | 2024.01.01முதல் 2024.12.31 வரையிலான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள் | 41 |


## புகைப்படங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| புகைப்படம் 2.1 | தொழில் நல்லிணக்கத்திற்கான சிறப்புச் சான்றிதழ்கள் வழங்கும் விழாவின் புகைப்படம் - 2024.11.06 | 30 |
| புகைப்படம் 2.2 | அவிசாவளை சமுதாய பொலிஸ் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டமொன்றின் புகைப்படம் - 2024.12.27 | 35 |

# முதலாம் அத்தியாயம்

## நிறுவனத் தோற்றப்பாடு / செயற்படுத்தல் சுருக்கம்

# நிறுவனத் தோற்றப்பாடு / செயற்படுத்தல் சுருக்கம்

### 1.1 நிறுவனம் பற்றிய அறிமுகம்

இலங்கையில் தனியார் துறை மற்றும் பகுதியளவான அரச துறையைச் சேர்ந்த தொழிலாளர் சமுதாயத்தினருக்கு தொழில் சட்டங்களின் மூலம் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை உறுதிப்படுத்தி, தொழில்தருநர்-தொழிலாளர் உறவை மேம்படுத்துவதன் ஊடாக நிறுவன மட்டத்தில் தொழில்துறை அமைதியைப் பாதுகாப்பதன் மூலம் கண்ணியமான பணிச்சூழலை உருவாக்குவது தொழில் திணைக்களத்தின் பிரதான பணியாகும்.

தொழில் திணைக்களம் 2024 ஆம் ஆண்டில் தனது சேவை பெறுநர்களுக்கு சேவைகளை வழங்குவதில் மேலும் திறம்பட செயல்பட வேண்டிய துறைகளைக் கண்டறிவதற்கும் அதற்காக எடுக்க வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகளை அடையாளம் காண்பதற்குமான நடவடிக்கைகளில் முதன்மையான கவனம் செலுத்தி பல விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதற்காக, தொழில் திணைக்கள அதிகாரிகளை உள்ளடக்கிய குழுக்களை அமைத்து, முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் பெற்று, பொருத்தமான முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அடுத்தகட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

### 1.2 நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள

| நோக்கு | செயற்பணி |
|---|---|
| இலங்கையில் தொழில்துறை அமைதியைப் பேணி நிலைநிறுத்தும் கண்ணியமான பணிச்சூழலை உறுதி செய்தல் | பணியிட ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் மூலமும் தொழில் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலமும் இலங்கையில் தொழில்துறை அமைதியுடன்கூடிய பணிச்சூழலை உறுதி செய்தல் |

**நோக்கங்கள**

- தனியார் மற்றும் பகுதியளவு அரச துறையிலுள்ள சேவை நிறுவனங்களில் நிலையான தொழிற்துறை அமைதியை உறுதிப்படுத்துதல்.
- கண்ணியமான பணிச்சூழலை உருவாக்குதல் மற்றும் தொழில் நியமங்களை உருவாக்குவதன் மூலம் ஊழியர்களின் சேவை அந்தஸ்தினை மேம்படுத்துதல்.
- ஊழியர்களின் சமூக பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்.
- பெண்கள் மற்றும் இளம் ஆட்களின் தொழில்சார் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் மற்றும் சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல்.
- ஊழியர்களின் சுகாதார நிலைமைகளுக்கு சாதகமானதும் ஆபத்துக்கள் இல்லாததுமான பணிச்சூழலை உருவாக்குதல்.

### 1.3 பிரதான பணிகள்

- சமூக உரையாடலை ஊக்குவிப்பதன் மூலம் நிறுவன மட்டத்தில் தொழில்தருநர்-தொழிலாளர் உறவினை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்தல்
- தொழில் சட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்
- தீர்த்தல், கூட்டு ஒப்பந்தங்கள் மற்றும் நடுத்தீர்ப்பு மூலம் தொழில் பிணக்குகளைத் தீர்த்தல்

- ஊழியர் சேமலாப நிதியத்தின் மூலம் ஊழியர்களின் சமூக பாதுகாப்புக்காக நடவடிக்கை எடுத்தல்
- தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்
- குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பு மற்றும் தொழில் புரியும் பெண்களின் பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்
- சம்பளம் மற்றும் சேவை நிபந்தனைகளை வலுப்படுத்துவதன் மூலம் தொழில் தரங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல்

## 1.4 திணைக்களத்தின் கட்டமைப்பு, அமைப்பு விளக்கப்படம், பிரதான பிரிவுகள் மற்றும் மொத்த பணியாள்தொகுதி

### 1.4.1 திணைக்களத்தின் கட்டமைப்பு



### 1.4.2 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

| | |
|---|---|
| ✓ தொழில் உறவுகள் பிரிவு | ✓ ஊழியர் சேமலாப நிதியப் பிரிவு |
| ✓ சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்பு மேம்பாட்டுப் பிரிவு | ✓ சட்ட அமுலாக்கப் பிரிவு |
| ✓ விசேட புலனாய்வுப் பிரிவு | ✓ நிர்வாகப் பிரிவு |
| ✓ தொழில் தரப் பிரிவு | ✓ நிதிப் பிரிவு |
| ✓ கைத்தொழில் பாதுகாப்புப் பிரிவு | ✓ திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு |
| ✓ தொழில் சுகாதாரப் பிரிவு | ✓ புள்ளிவிபரப் பிரிவு |
| ✓ பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவு | ✓ உள்ளக கணக்காய்வுப் பிரிவு |

### 1.4.3 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

#### 1.4.3.1 தொழில் உறவுகள் பிரிவு

தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாத்து நாட்டில் தொழில்துறை அமைதியை ஏற்படுத்தி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் பங்களிப்பு நல்கும் பொறுப்பினை தொழில் உறவுகள் பிரிவு ஏற்றுள்ளது. இதற்காக தொழில் உறவுகள் பிரிவின் கீழ் தொழில் முடிவுறுத்தல் பிரிவு மற்றும் தொழிற்சங்கப் பிரிவு இயங்கி வருவதோடு தொழில் நீதிமன்றத்தின் இணைப்பாக்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

அதன்படி, பொருளாதார ஆக்கவிளைவினை மேம்படுத்துவதற்குத் தேவையான தொழில்துறை அமைதியை ஏற்படுத்துதல், தொழில் சட்டங்களின் மூலம் குறித்துரைக்கப்பட்டுள்ள சேவை நிபந்தனைகள் மற்றும் சேவை நிலைமைகளைப் பாதுகாத்தல், கூட்டு ஒப்பந்தங்களைப் பதிவு செய்தல் மற்றும் மேம்படுத்துதல், வேலை பகிஷ்கரிப்புகள் மற்றும் தொழில் பிணக்குகளைக் குறைத்தல் மற்றும் தொழிற்சங்கங்களைப் பதிவு செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் என்பன இப்பிரிவின் பிரதான நோக்கங்களாகும்.

இப்பிரிவினால் பின்வரும் சட்ட ஏற்பாடுகள் செயல்படுத்தப்படுகின்றன.

- ✓ 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க தொழில் பிணக்குகள்கட்டளைச் சட்டம்
- ✓ 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்துதல் சட்டம்
- ✓ 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிலாளர்களின் தொழிலை முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- ✓ 1935 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தொழிற்சங்கங்கள் கட்டளைச் சட்டம்
- ✓ 2021 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க வேலையாளர்களின் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயதுச் சட்டம்

### 1.4.3.2 சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்பு மேம்பாட்டுப் பிரிவு

நாடு தழுவிய ரீதியில் பரந்து காணப்படுகின்ற பகுதியளவு அரச நிறுவனங்களினதும் தனியார் துறை நிறுவனங்களினதும் உச்ச மட்ட ஆக்கவிளைவினையும் வினைத்திறனையும் மேம்படுத்துவதற்காக இரு தரப்புகளுக்கு மத்தியில் தொழில்துறை அமைதி உறுதிபடுத்தப்படுகின்ற பணிச் சூழலை உருவாக்குவதன் செயன்முறையை நிறைவேற்றுவது சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்பு மேம்பாட்டுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் இப் பிரிவினால் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- சமூக கலந்துரையாடலை மேம்படுத்துவதற்கான கொள்கைகளையும் உபாய மார்க்கங்களையும் அறிமுகம் செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் மூலம் நிறுவன மட்டத்தில் வேலைத்தள ஆதரவினைக் கட்டியெழுப்புதல்.
- கூட்டு ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதற்காக வசதி வழங்குநராக செயற்பட்டு தொழில்துறை அமைதியை உருவாக்குதல்.
- ஆரோக்கியமான பணிச் சூழலை உருவாக்குவதற்காக பகுதியளவு அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக தொழில்தருநர் தொழிலாளர் ஆகிய இரு தரப்பினரையும் தொழில் சட்டங்கள் தொடர்பாக அறிவூட்டுதல் (இதற்காக நிறுவன மட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முகாமையாளர்களுக்கும் முதலாளிமார்களுக்குமான நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்படும்.)
- தொழில்தருநர் - தொழிலாளர் ஆகிய இரு தரப்பினதும் தொழில் திணைக்களத்தினதும் பங்கேற்புடன் பிராந்திய தொழில் அலுவலகங்கள் மூலம் முத்தரப்பு உறவை உருவாக்குதல், கொள்கை உருவாக்கத்திற்குத் தேவையான தகவல்களைத் திரட்டுதல், அறிவைப் பகிர்ந்துகொள்ளல் மற்றும் தொழில்தருநர் - தொழிலாளர் ஆகிய இரு தரப்பினர்களுக்கு இடையில் தொழில் சட்டங்கள் தொடர்பில் காணப்படுகின்ற சிக்கல்களைத் தீர்ப்பதற்காக வலய∴. மாவட்ட ஆலோசனைச்சபைகள் மற்றும் சமூக மேடை நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.
- சமூகக் கலந்துரையாடலையும் பணியிட ஒத்துழைப்பையும் மேம்படுத்துவதற்காகவும் அறிவை விருத்தி செய்வதற்காகவும் சஞ்சிகைகளை வெளியிடுதல்.

### 1.4.3.3 விசேட புலனாய்வுப் பிரிவு

ஏதேனுமொரு முறைப்பாடு பற்றிய விசாரணை அல்லது புலனாய்வு விசேட புலனாய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட வேண்டுமென தொழில் ஆணையாளர் நாயகம் தீர்மானிக்கும் சந்தர்ப்பங்களில், அத்தகைய விசாரணை இந்தப் பிரிவால் நடத்தப்படும்.

ஒரு தொழில் அலுவலகத்தில் முறைப்பாடு விசாரிக்கப்பட்ட அல்லது விசாரிக்கப்படும் விதத்தில் திருப்தியடையாத ஓர் ஊழியர் அல்லது தொழில்தருநர் (முதலாளி),

முறைப்பாட்டை மறுபரிசீலனை செய்வதற்கான கோரிக்கையை விசேட புலனாய்வுப் பிரிவில் சமர்ப்பிக்கலாம்.

தொழில் ஆணையாளர் நாயகத்தின் கட்டளையின்படி, இலங்கையில் தொழில்தருநர்-தொழிலாளர் உறவு காணப்படும் எந்தவொரு இடத்திலும் தொழில் விசாரணையை நடத்த விசேட புலனாய்வுப் பிரிவுக்கு அதிகாரம் உள்ளது.

### 1.4.3.4. தொழில் தரப் பிரிவு

தனியார் துறை ஊழியர்களின் தொழில் பாதுகாப்பு மற்றும் நலனோம்பல் மீது தாக்கம் ஏற்படுத்துகின்ற சம்பளம், சேவை நிலைமைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பான தரநியமங்களைத் தயாரித்தல், இற்றைப்படுத்துதல் மற்றும் அவற்றுக்கு சட்ட அந்தஸ்தினை வழங்குதல் திணைக்களத்தின் ஒருபிரதான செயற்பாடாகும். சேவை நிலைமைகள் மற்றும் நிபந்தனைகளுக்குரியதாக எழுகின்ற சிக்கல் நிலைமைகளைத் தீர்ப்பதன் பொருட்டு அது சம்பந்தமான தெளிவுபடுத்தல்களை வழங்குவதும் தர நியமங்களை நடைமுறைப்படுத்துவதிலான முன்னேற்றம் மற்றும் மேற்பார்வைப் பணியினை நிறைவேற்றுவதன் மூலம் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும் இச் செயன்முறையின் இன்றியமையாத ஒரு பகுதி என்பதோடு ஒட்டுமொத்த பொறுப்பினை நிறைவேற்றுவது திணைக்களத்தின் தொழில் தரப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

இப்பிரிவின் மூலம் பின்வரும் சட்ட ஏற்பாடுகள் செயல்படுத்தப்படுகின்றன.

- ✓ 1941 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்
- ✓ 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் (சேவை மற்றும் சம்பளம் முறைசார்படுத்தல்) சட்டம்
- ✓ 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஊழியர்களின் வரவு செலவுத் திட்ட நிவாரணப் படிச் சட்டம்
- ✓ 2016 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டம்
- ✓ 2016 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஊழியர்களின் வரவு செலவுத் திட்ட நிவாரணப் படிச் சட்டம்.

### 1.4.3.5. கைத்தொழில் பாதுகாப்புப் பிரிவு

கைத்தொழிற்சாலைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு பௌதீக ரீதியில் ஏதேனும் உடல்ரீதியான சேதங்கள் ஏற்படுதல், மின்சாரம், வெப்பம், காற்றழுத்தம், அதிக ஒளி மற்றும் இரைச்சல் என்பன மூலம் உடல்ரீதியான சேதங்கள் ஏற்படுவதற்கான அல்லது மரணங்கள்கூட சம்பவிப்பதற்கான அச்சுறுத்தல் உள்ளது. எனவே, விபத்துக்கள் ஏற்படுவதைக் குறைப்பது தொழில் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பாகும். இலங்கையில் கைத்தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களின் தொழில்சார் பாதுகாப்பு,

சுகாதாரம் மற்றும் நலனோம்பல் தொடர்பான பிரதான சட்டரீதியான சாதனம் 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலை கட்டளைச்சட்டம் மற்றும் அதற்கு அமைவாக நிறைவேற்றிக் கொள்ளப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் என்பனவாகும். ஆபத்துக்களற்ற பணிச் சூழலை உருவாக்குவதன் மூலம் ஆபத்துத் தொடர்பான அச்சமின்றி பணியாற்றக்கூடிய பாதுகாப்பான ஊழியர் படையணியை உருவாக்குவதன் ஊடாக பணியிடங்களில் வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் அதன்மூலம் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கும் தேசிய பொருளாதாரத்திற்கு வழங்கப்படுகின்ற பங்களிப்பினை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒட்டுமொத்த இலங்கையும் உள்வாங்கப்படுகின்ற வகையில் மாவட்ட கைத்தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் அலுவலகங்கள் 10 இல் சேவையில் ஈடுபட்டுள்ள பொறியியலாளர்களினால் கைத்தொழிற்சாலைகள் பரிசோதிக்கப்பட்டு இப்பணி நிறைவேற்றப்படுவதோடு தொழில் அலுவலர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற தொழில் பரிசோதனைகளின் போது இனங்காணப்படுகின்ற ஆபத்து நிலைமைகள் மாவட்ட கைத்தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் அலுவலகத்திற்கு தெரிவிக்கப்படுவதனால் அத் தகவல்களும் பயன்படுத்தப்பட்டு ஊழியர்களுக்கான பாதுகாப்பு வழங்கப்படுகின்றது.

அடிப்படையில் தொழில்சார் பாதுகாப்பினை வழங்குவதற்காக பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன.

- புதிய கைத்தொழிற்சாலைகளைப் பதிவுசெய்தல்
- கட்டிட வரைபடங்களைப் பரிசோதித்தல் மற்றும் அங்கீகரித்தல்
- கைத்தொழிற்சாலைகளைப் பரிசோதித்தல்
- ஆபத்துக்களை புலனாய்வு செய்தல் மற்றும் அபாயகரமான சம்பவங்களை புலனாய்வு செய்தல்
- சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- அதிக ஆபத்துடன்கூடிய இயந்திர சாதனங்களுக்கான பரிசோதனையை ஒழுங்குபடுத்துதல்
- முறைப்பாடுகளை விசாரணை செய்தல்
- விழிப்பூட்டல் செயலமர்வுகளை நடாத்துதல்
- தொழில்சார் விபத்துக்கள் மற்றும் தொழில்சார் நோய்களுக்கு இலக்காவோரை தொழில் நட்டஈட்டு ஆணையாளர் மற்றும் சிரம வாசனா நிதியத்திற்கு ஆற்றுப்படுத்துதல்
- ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள்
- தொழில் திணைக்களத்தினதும் அமைச்சினதும் பொறியியல் நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.

### 1.4.3.6. தொழில் சுகாதாரப் பிரிவு

நடைமுறையிலுள்ள கைத்தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஊழியர்களின் சுகாதார நிலைமை பாதுகாக்கப்படுகின்ற வகையில் பணியிடச் சூழலை உருவாக்குவது தொழில் தருநரின் கட்டாயமான பொறுப்பாக அமைவதோடு பாதுகாப்பான பணிச்சூழலில் சேவையாற்றுவதற்காக உள்ள உரிமை ஊழியர்களின் அடிப்படை உரிமையாகும்.

தொழிலில் ஈடுபடும்போது பணியிடச் சூழலில் காணப்படுகின்ற குறைபாடுகளின் காரணமாக ஊழியர்கள் நோய் நிலைமைகளுக்கு உள்ளாவதற்கான அச்சுறுத்தல் மற்றும் திடீர் விபத்துகளுக்கு உள்ளாகுதல் என்பனவற்றைத் தடுப்பதன் மூலம் தொழிலாளர்களுக்கு வழங்கக்கூடிய உயர்மட்ட உடல், உள, சமூக மற்றும் ஆன்மீக நலனோம்பலுடன்கூடிய சூழலொன்றை பணியிடத்தில் ஏற்படுத்த வேண்டும். அதற்குத் தேவையான கல்வியறிவை வழங்குவதும் சேவை நிலையத்தில் உள்ள நிலைமைகளை பரிசோதனைக்கு உட்படுத்துவதும் தொழில் சுகாதாரப் பிரிவின் தொழிற்பாட்டுச் செயன்முறையாகும்.

அடிப்படையில் பணிச்சூழலின் சில பலவீனங்களின் காரணமாக உடனடியாக அல்லது நீண்டகால ரீதியில் ஊழியர்கள் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கக்கூடிய நிலைமைகள் காணப்படுகின்றனவா என்பது தொடர்பாக விஞ்ஞானரீதியான முறையியல்களின் கீழ் கண்டறிதல், அதன்மூலம் ஏற்படக்கூடிய சுகாதார சிக்கல்களை அளவுசார் மற்றும் தரம் சார் ரீதியில் அளவிடுவது ஏற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞான ரீதியான முறையியல்களின் கீழ் மேற்கொள்ளல், மேற்படி விபத்துக்களைத் தடுப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் மற்றும் தடுப்பதன் பொருட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விழிப்பூட்டுதல்என்பன நடைமுறை ரீதியில் மேற்கொள்ளப்படுகின்றன.

அடிப்படையில் தொழில் சுகாதாரப் பிரிவினால் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- பணியிடங்களில் காணப்படுகின்ற சுகாதாரப் பாதுகாப்பினை பரிசோதித்தல்
- பணியிடங்களில் காணப்படுகின்ற சுகாதாரப் பாதுகாப்பினை பேணுவதற்குத் தேவையான அறிவினை வழங்குதல்
- தொழில் சுகாதார விடயங்களின் அடிப்படையில் நட்டஈடு கோருகின்ற நபர்கள் தொடர்பாகவும் நோய் நிலைமை ஏற்படுதல் மற்றும் பணியிடத்தின் நிலைமைகள் தொடர்பாகவும் நீதிமன்றத்தில் சாட்சியமளித்தல்.
- ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் இருந்து நிதி கோருகின்ற, சேவையாற்றுவதற்கு முடியாத வகையில் நோய் வாய்ப்பட்டுள்ள தொழிலாளர்களின் நோய் நிலைமைகளை மதிப்பிடுதல்.

### 1.4.3.7. பெண்கள்மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவு

இலங்கையின் உழைப்பாளர் படையில் பெண்களின் பங்களிப்பினை மேம்படுத்துதல் மற்றும் சிறுவர் தொழிலாளர் முறையை முழுமையாக இல்லாதொழித்தல் இலங்கை அரசாங்கத்தின் இன்றியமையாத ஒரு பொறுப்பாக காணப்படுவதுடன் இந்தப் பொறுப்பானது பெண்கள்மற்றும் சிறுவர் அலுவல்கள் பற்றிய பிரிவின் பணிகளில் அடிப்படையான இருவகைப் பொறுப்புக்களாக அமைந்துள்ளது.

அதன் பிரகாரம், வேலைத்தளத்தில் பெண்கள் உள்வாங்கப்படுகின்ற தொழில் சட்டங்களை நடைமுறைப்படுத்துதல், குறித்த சட்டங்களை காலத்திற்கேற்ப மீளாய்வு செய்து தேவையான திருத்தங்களை விதப்புரை செய்வதன்மூலம் ஆக்கவிளைவுடன் கூடிய பெண்களின் உழைப்புப் பங்களிப்பினை நாட்டுக்கு பெற்றுக்கொடுப்பது இப்பிரிவின் முதன்மையான ஒரு பொறுப்பாகும்.

அத்துடன் அனைத்துத் தரப்பினரினதும் பங்களிப்புடன் சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல், 18 வயதுக்குக் குறைந்தவர்களுக்கான தொழில் சட்டங்களை நடைமுறைப்படுத்துதல், மற்றும் தற்போதைய சமூக பொருளாதார நிலைமைகளுக்கு அமைய தற்போதுள்ள சட்டத்தில் செய்யப்பட வேண்டிய திருத்தங்களைப் பரிந்துரைத்தல் போன்றனவும் இந்த அலகின் முக்கிய பொறுப்புகளாகும்.அதன் பிரகாரம் இப் பிரிவினால் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன.

- தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்கள் மற்றும் இளம் ஆட்கள் தொடர்பில் ஏற்புடையதாக அமைகின்ற சட்ட ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அதற்காக வலய மற்றும் மாவட்ட தொழில் அலுவலகங்களை நெறிப்படுத்துதல்.
- பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் உரிய தொழில் சட்டதிட்டங்கள் தொடர்பில் விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நாடளாவிய ரீதியில் முன்னெடுத்தல்.
- தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு ஏற்புடையதாக அமைகின்ற சட்டங்களைப் பயின்று பலவீனங்களையும் குறைபாடுகளையும் இனங்கண்டு சட்டத்தினை வலுப்படுத்துவதற்காக விதப்புரைகளை முன்வைத்தல்.
- தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச ஆகிய மட்டங்களில் நடத்தப்படுகின்ற சிறுவர் அபிவிருத்திக் குழுக்களின்போது பயனுள்ள பங்களிப்பினை வழங்குதல்.
- தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்களுக்காக சுதந்திர வர்த்தக வலயங்களில் நிறுவப்பட்டுள்ள தொழில் திணைக்களத்திற்குரிய பெண்கள் விடுதிகளை பராமரித்தல்.
- எல்லா வகையான சிறுவர் தொழிலையும் இல்லாதொழிக்கும் தேசிய மற்றும் சர்வதேசப் பொறுப்பை நிறைவேற்றுதல்.

அதேவேளை, இப்பிரிவினால் பின்வரும் சட்ட ஏற்பாடுகள் அமுல்படுத்தப்படுகின்றன.

- ✓ 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் சிறுவர்களையும் தொழிலுக்கமர்தல் சட்டம்

- ✓ 1939 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மகப்பேறு உதவி கட்டளைச்சட்டம்
- ✓ 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடை மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தின் உரிய பிரிவுகள்.

### 1.4.3.8. ஊழியர் சேமலாப நிதியப் பிரிவு

இலங்கையின் தனியார் துறை மற்றும் பகுதியளவு அரச துறையில் சேவையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு ஆரோக்கியமான பொருளாதார நிலைமையுடன்கூடிய இளைப்பாறல் வாழ்க்கைக் காலத்தை பெற்றுக்கொடுக்கும் அடிப்படை நோக்கத்தை முதலாகக் கொண்டு 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் மூலம் ஊழியர் சேமலாப நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியத்திற்கான நிர்வாகம் தொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதோடு அதன் நிதி முகாமைத்துவம் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. இடைக்கிடை திருத்தப்பட்ட இச் சட்டத்தின்கீழ் இன்றளவில் நிறைவேற்றப்படுகின்ற செயற்பாடுகள் பின்வருமாறு அமைகின்றன.

- ஊழியர் சேமலாப நிதியத்திற்காக தொழில்தருநர்களைப் பதிவு செய்தல்
- ஊழியர் சேமலாப நிதியத்திற்காக அங்கத்தவர்களைப் பதிவுசெய்தல்
- பங்களிப்புத் தொகை செலுத்தாத தொழில்தருநர்களிடமிருந்து பங்களிப்புத் தொகைகளை அறவிடுதல்.
- அங்கத்தவர்களுக்கு மீளளிப்பு தொகைகளை செலுத்துவதற்கு செலுத்தல் கட்டளைகளை வழங்குதல்.
- உறுப்பினரின் ஊழியர் சேமலாப நிதியை பிணையாக வைத்து சம்பந்தப்பட்ட வங்கிகளில் வீடமைப்பு நோக்கங்களுக்காக கடன் பெற்றுக்கொள்ள முன்வைக்கப்படும் கோரிக்கைகளை பரிந்துரை செய்தல்.
- பாதுகாப்பு உரிமம் பெற தனியார் பாதுகாப்பு சேவை நிறுவனங்களுக்கு அனுமதி அறிக்கைகளை வழங்குதல்.
- வீட்டுப் பணி அல்லது மருத்துவ சிகிச்சை பணிகளுக்காக உறுப்பினரின் கணக்கு நிலுவையில் 30% வரை செலுத்துதல்
- அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதிக்கான மேற்பார்வை.

### 1.4.3.9 சட்ட அமுலாக்கப் பிரிவு

தொழில் சட்டங்களை நாடு தழுவிய ரீதியில் பயனுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதன் ஊடாக தொழில்துறை அமைதியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தொழில் திணைக்களத்தின் சட்ட அமுலாக்கப் பிரிவு இயங்கி வருகின்றது. அதன் பிரகாரம் தொழில் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்ட ஏற்பாடுகள் நாடு தழுவிய ரீதியில் ஒரே வகையில் நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக

அச் சட்டங்களை மீறுகின்றவர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதும் அதன்மூலம் தொழில்தருநர் தொழிலாளர் உரிமைகளை பாதுகாத்து தொழில்தருநர் தொழிலாளர் ஒத்துழைப்பினை மேம்படுத்துவதும் திணைக்களத்தின் சட்ட அமுலாக்கப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அதன் பிரகாரம் சட்ட அமுலாக்கப் பிரிவின் பிரதான செயற்பாடுகளை பின்வரும் வகையில் எடுத்துக் காட்ட முடியும்.

- நியதிச்சட்ட தொழில் சட்டங்கள் மீறப்படும்போது அதற்கு எதிராக நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் குறிப்பிட்ட வழக்குகளை நெறிப்படுத்துதல்.
- வணிக மேல் நீதிமன்றத்தில், மாகாண மேல் நீதிமன்றத்தில், மேல் நீதிமன்றத்தில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அல்லது உயர் நீதிமன்றத்தில் தொழில் திணைக்களத்திற்கு எதிராக அல்லது தொழில் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்படுகின்ற வழக்குகளின் போது அவ்வழக்கு நடவடிக்கைகளுக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் அவசியமான இணைப்பாக்கத்தினைப் பேணுதல்.
- வலய அலுவலகங்களின் கண்காணிப்பின் கீழ் மாவட்ட மற்றும் உபதொழில் அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற நீதித்துறைசார் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல், தேவையான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் நீதித்துறைசார் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தைப் பரிசோதித்தல்.
- வலயத்திலுள்ள மாவட்ட/உபதொழில் அலுவலகங்களில் மற்றும் நீதித்துறை நடவடிக்கைகளுக்கு ஆற்றுப்படுத்தப்படவேண்டிய சந்தர்ப்பங்களில் மற்றும் செயலிழந்துள்ள வழக்குகளை செயற்பாட்டு நிலைக்குக் கொண்டுவரும் செயல்முறையின் போது தேவையான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் திணைக்களம் சார்பாக வழக்குகளை நெறிப்படுத்துதல் வலய அலுவலகங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள சட்ட அலுவலர்களினால் மேற்கொள்ளப்படுகின்றன.
- தொழில் சட்டத் திருத்தங்களுடன் தொடர்புடைய பணிகளின்போது தொழில் திணைக்களத்தின் சார்பில் நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுவதை ஒருங்கிணைத்தல்.

### 1.4.3.10 நிர்வாகப் பிரிவு

நிர்வாகப் பிரிவானது 04 கிளைகளைக் கொண்டமைந்துள்ளது. அவையாவன, நிர்வாகக் கிளை, தாபனக் கிளை, கட்டிட பராமரிப்பு அலகு மற்றும் நூலகம் ஆகும்.

இவற்றுக்கு மத்தியில் நிர்வாகக் கிளையின் மூலம் திணைக்களத்திற்கான சேவைகள் மற்றும் வழங்கல்கள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்கீழ் திணைக்களத்தின் கட்டிட நிர்மாணப் பணிகளுக்குத் தேவையான காணிகளை இனங்காணுதல் மற்றும் அவற்றை கையகப்படுத்தல், கட்டிட நிர்மாணப் பணிகளை நெறிப்படுத்துதல், கட்டிடங்களுக்கான புனரமைப்பு மற்றும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நெறிப்படுத்துதல், தேவைக்கேற்ப கட்டிடங்களை வாடகைக்குப் பெறல்,திணைக்களத்தின் வாகன நிர்வாகம், திணைக்களத்தின் பிரிவுகளுக்கும் பிராந்திய அலுவலகங்களுக்கும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்,மூலதன பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்கான முகாமைத்துவம், மேலதிக நேரக் கொடுப்பனவுகள், விடுமுறைநாள் சம்பளம், அக்கிரஹார காப்புறுதி மற்றும் இடருதவிக் கடன் அங்கீகரிக்கப்படுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தாபனக் கிளையின் மூலம் திணைக்களத்தின் பதவியணியின் தேவைகள் இனங்காணப்படுதல், தேவையின் பிரகாரம் ஆட்சேர்ப்புத் தொடர்பான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுதல், உத்தியோகத்தர்களின் பதவி உயர்வுகள், வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைகள் நடாத்தப்படுதல்,செயலாற்றுகை மதிப்பீடு, சம்பள ஏற்றங்கள் வழங்கப்படுதல், இடமாற்றங்கள், உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறச் செய்யப்படுதல், உத்தியோகத்தர்களின் விடுமுறை நடவடிக்கைகள் மற்றும் பதவியணியின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் போன்ற விடயங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கட்டிட பராமரிப்பு அலகு ஆனது திணைக்களத்தின் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கும் கட்டிடங்களை புனரமைப்பதற்கும் மேம்படுத்துவதற்குமுரிய நடவடிக்கைகளுக்கான வருடாந்த வரவு செலவு மதிப்பீடுகளையும் பெறுகைத் திட்டத்தையும் தயாரிப்பதற்காக ஆதரவளித்தல், கட்டிடங்களை நிர்மாணிப்பது தொடர்பில் கட்டிடத் திணைக்களம் உள்ளிட்ட ஏனைய நிறுவனங்களுடன் இணைப்பாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், கட்டிட புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்கான மேற்பார்வை, திணைக்களத்திற்கான தலைமையகத்தினதும் பிராந்திய அலுவலகங்களினதும் அனைத்து பராமரிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் தொடர்பாக செயற்படுகின்றது.

தொழில்திணைக்களத்தின் நூலகம் ஆனது தொழில்துறை தொடர்பான சட்டங்கள்,புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள் தொடர்பில் இலங்கையில் காணப்படுகின்ற முதன்மையான நூலகமாகும். இது தொழில் திணைக்களம், தொழில் அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள பிற நிறுவனங்களின் ஊழியர்களுக்கும், வெளி வாசகர்களுக்கும் தொழில்துறை தொடர்பான அனைத்து சட்டங்கள், புத்தகங்கள், வெளியீடுகள் போன்றவற்றை கற்றாராய்வதற்கு வசதிகளை வழங்குகின்றது.

தொழில்திணைக்களத்தின் நூலகத்தில் 200,000க்கும் மேற்பட்ட புத்தகங்கள், வெளியீடுகள் மற்றும் சஞ்சிகைகள் உள்ளன. அதன்படி இந்தத் தொகுப்பை, தொழிற் சட்டங்கள் சார்ந்த கட்டளைச் சட்டங்கள், புத்தகங்கள்,சஞ்சிகைகள், பருவ இதழ்கள், சர்வதேச தொழிலாளர்

அமைப்பின் வெளியீடுகள், ஐக்கிய நாடுகளின் வெளியீடுகள் மற்றும் சிறுவர் தொழிலாளர் முறைபற்றிய வெளியீடுகள் என வகைப்படுத்தலாம்.

### 1.4.3.11 நிதிப் பிரிவு

தொழில் திணைக்களத்தின் வருடாந்த செயற்பாடுகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காகவும் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைவதற்காகவும் பௌதீக வளங்கள் மற்றும் நிதி வளங்கள் என்பன இன்றியமையாத காரணிகளாகும். அதன்படி வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்படுகின்ற நிதி வளத்தினை அரச கொள்கைகளுக்கு அமைவாக வினைத்திறனாகவும் பயன்மிக்கதாகவும் சிக்கனமாகவும் நிர்வகித்தல் நிதிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

திணைக்களத்தின் நிதி நிர்வாகத்தினை வினைத்திறன் மிக்க வகையிலும் வெளிப்படையாகவும் மேற்கொள்வதற்காக நிதிப்பிரிவு பின்வரும் வகையில் செயற்படுகின்றது.

- திணைக்களத்தின் பெறுகை திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்துதல்
- பெறுகைச் செயன்முறையின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் பொருட்களையும் சேவைகளையும் உரிய முறையில் பகிர்ந்தளித்தல்
- பிராந்திய அலுவலகங்களுக்கான சில்லறைத் தொகைகளை வழங்குதல் மற்றும் அந்த அலுவலகங்களின் நிதி மேற்பார்வை
- மாதாந்த, அரையாண்டு மற்றும் வருடாந்த கணக்கு அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் உரிய தரப்புகளுக்கு குறித்த தினத்தில் சமர்ப்பித்தல்
- வெளித் தரப்பினரிடமிருந்து கிடைக்கின்ற அனைத்து வரவுகள் மற்றும் செலவுகள் பற்றிய நடவடிக்கைகளை சட்ட விதிகளின் பிரகாரம் நெறிப்படுத்துதல்
- திணைக்களம் கொண்டுள்ள மூலதன சொத்துக்களை மீளாய்வு செய்தல் மற்றும் கையுதிர்வு நடவடிக்கைகள்
- திணைக்கள அலுவலர்களுக்கான சம்பளம், கடன் முற்பணம் மற்றும் செலுத்தல்களை மேற்கொள்ளுதல்

### 1.4.3.12. திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு

திணைக்களத்தின் செயற்பாட்டுத் திட்டம் மற்றும் மூலோபாயத் திட்டம் என்பவற்றைத் தயாரித்தல்மற்றும் அதன் கீழ் உள்ள நோக்கங்களுக்கு ஏற்ப திணைக்களத்தின் அனைத்துப் பிரிவுகளையும் பிராந்திய அலுவலகங்களையும் வழிநடாத்தும் செயல்பாடுகளை

ஒருங்கிணைத்தல்,திணைக்களத்திற்குரிய பிரிவுகளின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக நடத்தப்படுகின்ற தொழில் ஆணையாளர்களின் மாதாந்தக் கூட்டத்தின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல், தொழில் அமைச்சு முன்னேற்ற மீளாய்வுக்காக மாதாந்தம் நடாத்தும் முகாமைத்துவ தொழிற்பாட்டு குழுக் கூட்டத்திற்கு திணைக்களத்தின் முன்னேற்றத்தை தயாரித்தல்,அக்கூட்டத்திற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்,தொழில் அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சுக்களினால் கோரப்படுகின்ற தரவுகளையும் அறிக்கைகளையும் வழங்குதல் என்பன திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவின் திட்டமிடல் மற்றும் முன்னேற்ற மீளாய்வுப் பணியாகும்.

தொழில்திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களின் முன்னேற்ற மதிப்பாய்வு நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்கு இந்தப் பிரிவு பொறுப்பாகவுள்ளது. இதன் கீழ்,பிராந்திய அலுவலகங்களின் வருடாந்த முன்னேற்ற மதிப்பாய்வுத் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதன்போது வலயங்களுக்குப் பொறுப்பான பிரதி தொழில் ஆணையாளர்கள் ஊடாக ஒவ்வொரு வலயத்திலும் முன்னேற்ற மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்படுவதுடன், பிரிவினால் கண்காணிப்புக்குழுக்கள் ஆற்றுப்படுத்தப்பட்டு ஒவ்வொரு அலுவலகத்தின் முன்னேற்றமும்பரிசோதிக்கப்படுகின்றது.

அதன்படி,தொழில் திணைக்களத்தின் நோக்கு மற்றும் செயற்பணி என்பவற்றை நிறைவேற்றிக்கொள்வதற்காக அனைத்து மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்கள் மட்டுமன்றி திணைக்களத்தின் அனைத்துப் பிரிவுகளும் செயல்படும் விதம் மற்றும் வருடாந்த இலக்குகளை நோக்கிப் பயணித்தல் ஆகியவற்றுக்கான மேற்பார்வையும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

இதன்போது,திணைக்களத்தின் பிரிவுகள் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் பணிகளை மேற்பார்வை செய்தல் மற்றும் அதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்ற தரவுகளைப் பகுப்பாய்வு செய்து வலய மட்டத்தில் முன்னேற்ற மதிப்பாய்வுக் கூட்டங்களை நடாத்தி தொடர்புடைய அலுவலகங்களின் முன்னேற்றத்தை மேற்கொண்டும் மேம்படுத்துவதற்குத் தேவையான விதப்புரைகளை வழங்குதல் இப்பிரிவின் மேற்பார்வை பணியாக நிறைவேற்றப்படுகின்றது.

திணைக்களத்தின் அனைத்து பணியாளர்களுக்கும் தேவையான பயிற்சிகளை வழங்குதல், வெளி நிறுவனங்களினால் நடத்தப்படுகின்ற பயிற்சிப் பாடநெறிகளுக்கு உத்தியோகத்தர்களை ஆற்றுப்படுத்துதல், பல்கலைக்கழக பட்டங்களுக்கும் பட்டப்பின் படிப்புகளுக்கும் தேவையான நிதி ஏற்பாடுகளை வழங்குதல் மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்குத் தேவையான இணைப்பாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் இப்பிரிவினால் நிறைவேற்றப்படுகின்ற மனித வள அபிவிருத்திப் பணியாகும்.

அத்துடன், திணைக்களத்தின் அலுவலர்களுக்குத் தேவையான தொழிற்துறை சார்ந்த கட்டளைச் சட்டங்கள், சம்பளச் சபை முடிவுகள் போன்றவற்றை அச்சிட்டு வழங்குதல்,

தொழில் அலுவலர்களுக்கு கள நடவடிக்கைகளின்போது பயன்படுத்துவதற்குத் தேவையான தொழில் விசாரணை அறிக்கைகள், மாதாந்த நாட் குறிப்புகள் போன்ற பொதுவான மாதிரிப் படிவங்களை அச்சிட்டு வழங்குதல் போன்ற அச்சிடல் நடவடிக்கைகளும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

#### 1.4.3.13 புள்ளிவிபரப் பிரிவு

இலங்கையில் தொழில் துறையின் திசையைப் பற்றிய புரிதலைப் பெறுதல், கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்ளல், தற்போதுள்ள தொழில் சட்டங்கள் மற்றும் கட்டளைகளைச் சட்டங்களை திருத்த வேண்டியதன் அவசியத்தை அடையாளம் காணல் மற்றும் தொழில் துறை தொடர்பான எதிர்கால எதிர்வுகூறல்களுக்காக தரவுகளைச் சேகரித்து பகுப்பாய்வு செய்தல் புள்ளிவிபரப் பிரிவின் பணிப்பொறுப்பாகும்.

அதன்படி, இந்தப் பிரிவின் மூலம் தொழிலாளர் புள்ளிவிபர ஆண்டறிக்கை (Labour Statistics Sri Lanka), வேலை நேரம் மற்றும் ஊழியக் கிரயம் பற்றிய ஆய்வு (Survey on Working Hours and Labour Cost), தனியார் துறையின் தொழிலாளர் தேவை பற்றிய கண்ணோட்டம் (Outlook on Labour Needs of Private Sector), தனியார் துறை மற்றும் பகுதியளவான அரச துறை வேலைவாய்ப்பு பற்றிய ஆய்வு (Annual Survey of Private and Semi Government Sector Employment), தொழில் சந்தையின் பிரதான குறிகாட்டிகள் (Key Indicators of Labour Market) போன்ற அறிக்கைகள் ஆண்டுதோறும் அல்லது தேவைக்கேற்ப தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன.

#### 1.4.3.14. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

ஏனைய அனைத்து அரச நிறுவனங்கள் போலவே தொழில் திணைக்களமும் அதன் அனைத்து செயற்பாடுகளையும் நிதிப் பிரமாணங்கள், அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள் மற்றும் திணைக்களத்தினால் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகளின் பிரகாரம் முறையாக மேற்கொள்ளுதல் வேண்டும். அதன் பிரகாரம் மேற்படி நடவடிக்கைகள் வளங்களின் உச்சப் பயன்பாட்டுடனும் வெளிப்படைத் தன்மையுடனும் உயர் மட்டத்திலும் இடம்பெறுவதை மேற்பார்வை செய்வதற்காக தொழில் ஆணையாளர் நாயகத்தின் நேரடியான கண்காணிப்பின் கீழ் உள்ளக கணக்காய்வுப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

### 1.5 திணைக்களத்தின் கீழுள்ள நிதியங்கள்

1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் மூலம் ஊழியர் சேமலாப நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியானது இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் நிர்வகிக்கப்படுகிறது.

# இரண்டாம் அத்தியாயம்

# முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்

# முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

## 2.1. தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு

இலங்கையின் தனியார் மற்றும் பகுதியளவு அரச துறைகளில் பணியாற்றும் ஊழியர்களின் சமூகப் பாதுகாப்பிற்காக 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் மூலம் ஊழியர் சேமலாப நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியத்தின் நிர்வாக நடவடிக்கைகள் தொழில் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுவதோடு, அதன் நிதி முகாமைத்துவம் பற்றிய பொறுப்பினை இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபை வகிக்கின்றது. அதன்படி 2024.01.01 முதல் 2024.12.31 வரை தொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறு.

### 2.1.1 ஊழியர் சேமலாப நிதி அனுகூலங்களைச் செலுத்துதல்

2024.01.01 முதல் 2024.12.31 வரை ஊழியர் சேமலாப நிதி அனுகூலங்களைச் செலுத்துவது தொடர்பாக 166,060 தீர்மானக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதோடு தொடர்புடைய தகவல்கள் கீழே உள்ள வரைபடத்தின் மூலம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

**வரைபடம் 2.1 – 2024.01.01 முதல் 2024.12.31 வரை ஊழியர் சேமலாப நிதியத்தின் அனுகூலங்களைச் செலுத்துவதற்காக அனுப்பப்பட்டுள்ள தீர்மானக் கடிதங்களின் எண்ணிக்கை**




| Category Description Key | |
|---|---|
| A | மரணித்த அங்கத்தவர்களுக்கான அனுகூலங்கள் |
| B | 30% இளைப்பாறலுக்கு முன்னரான அனுகூலங்கள் |
| C | இளைப்பாறும் வயதை அடைந்து சேவையிலிருந்து விலகியதன் பின்னர் ஊ.சே.நி.அனுகூலம் செலுத்தப்படுதல் |
| D | திருமணத்தின் காரணமாக சேவையிலிருந்து விலகிய பெண் அங்கத்தவர்களுக்கு அனுகூலம் செலுத்தப்படுதல் |

| | |
|---|---|
| E | முழுமையான பலவீனத்தின் காரணமாக சேவையிலிருந்து விலகியதனால் அனுகூலங்கள் செலுத்தப்படுதல் |
| F | வெளிநாட்டில் நிரந்தரமாக வசிப்பதற்குச் சென்றதன் காரணமாக அனுகூலங்கள் செலுத்தப்படுதல் |
| G | அரச சேவையின் அல்லது மாகாண அரச சேவையின் நிரந்த ஓய்வூதியத்துடனான நியமனம் கிடைக்கப்பட்டதனால் சேவையிலிருந்து விலகியமையினால் அனுகூலங்கள் செலுத்தப்படுதல் |
| H | அரச கூட்டுத்தாபனம்/சபை மூடப்படுதல், செலவுகளைக் குறைப்பதற்கு ஊழியர்களை நீக்குதல் அல்லது கம்பெனியொன்றாக மாறியதன் காரணமாக சேவையை விட்டுச் சென்ற ஊழியர்களுக்கு அனுகூலங்கள் செலுத்தப்படுதல் |

### 2.1.2 பங்களிப்புத் தொகைகளை செலுத்தத் தவறும் தொழில்தருநர்களிடமிருந்து அவற்றை அறவிடுவதற்காக அறிவித்தல்களை அனுப்புதல்

பங்களிப்புத் தொகைகளை செலுத்தத் தவறும் தொழில்தருநர்களிடம் இருந்து அப்பணத்தை அறவிடுவதற்காக திணைக்களமானது முதல் அறிவித்தல் மற்றும் இறுதி அறிவித்தல் என்பவற்றை அனுப்புவதோடு அவற்றுக்குப் பதிலளிக்காத பட்சத்தில், சட்ட நடவடிக்கை மேற்கொண்டு உரிய பங்களிப்புத் தொகைகளையும் மிகைத் தொகைகளையும் அறவிட்டு கணக்குப் பதிய நடவடிக்கை எடுக்கின்றது.

**படம் 2.1 - 2024.01.01 முதல் 2024.12.31 வரை அறிவித்தல்களை அனுப்புவதன் முன்னேற்றம்**

| அனுப்பப்பட்ட முதல் அறிவித்தல்களின் எண்ணிக்கை | முதல் அறிவித்தல்களுக்கு உரியதாக கணக்கிடப்பட்ட தொகை ரூ. | அனுப்பப்பட்ட இறுதி அறிவித்தல்களின் எண்ணிக்கை | இறுதி அறிவித்தல்களுக்கு உரியதாக கணக்கிடப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|
| **14,412**   | **7247 மில்லியன்**   | **7040**   | **3914 மில்லியன்**   |

### 2.1.3 ஊழியர் சேமலாப நிதியத்தை மேம்படுத்துவதற்கும் வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கலின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

- ✓ ஊழியர் செமலாப நிதி தொடர்பான சேவைகளை பயனாளிகளுக்கு ஒரே இடத்தில் வழங்குவதற்காக, தொழில் செயலக கட்டிடத்தின் முதலாம் தளத்தில் புதிய அலுவலக வளாகம் 2024.08.06 ஆம் திகதி திறக்கப்பட்டது. அதன்படி, முழு மீளளிப்பு கொடுப்பனவுகள் பிரிவு, இறந்த உறுப்பினர்களின் கோரல் பிரிவு (L பிரிவு), 30% கோரல் பிரிவு, மத்திய கோவையாடல் பிரிவு ஆகிய பிரிவுகள் முதலாம் தளத்தில் நிறுவப்பட்டு சேவைகள் வழங்கப்படுகின்றன. மேலும், கொழும்பு வடக்கு , கொழும்பு தெற்கு, கொழும்பு கிழக்கு, கொழும்பு மேற்கு மற்றும் மத்திய கொழும்பு ஆகிய மாவட்ட தொழில்

அலுவலகங்களுக்கு உரியதாக தொழிலாளர்களை ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களாகப் பதிவு செய்யும் புதிய முறையியலையும் இந்த இடத்திலேயே மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

- ✓ ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பாக உறுப்பினர்களுக்கு சரியான விழிப்புணர்வு இல்லாததால் ஏற்படும் பிரச்சினைகளை குறைப்பதற்காகவும், உறுப்பினர்களையும் தொழில்தருநர்களையும் அறிவூட்டுவதற்காகவும் 2024 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியின் ஆதரவுடன் நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.
- ✓ ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் ஊழியர்களைப் பதிவு செய்வதற்கான புதிய மென்பொருள் தயாரிக்கும் பணி 2023 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் மேலதிக நடவடிக்கைகள் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி, அனைத்து மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களில் இந்த புதிய மென்பொருளை நிறுவும் பணி 2024 டிசம்பர் மாதமளவில் நிறைவடைந்தது. இதன் மூலம் ஊழியர்களை ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் பதிவு செய்யும் நடவடிக்கைகள் மிகவும் வினைத்திறனுடன் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.
- ✓ தொழில்தருநர்களின் பதிவை ஊக்குவிப்பதற்கும் நிறுவன பதிவேட்டை முறைப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் அடையாளம் காணப்பட்டன. அதன்படி, தொழில் அலுவலகங்கள் மாதத்திற்கு குறைந்தது 04 கூட்டு ஆய்வுகளை நடத்தத் தொடங்கியது. மேலும், வெகுசன ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதன் மூலம் பொது மக்களின் விழிப்புணர்வை மேம்படுத்துதல், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்புச் சபை போன்ற பிற அரச மற்றும் பகுதியளவு அரச நிறுவனங்களின் தரவு அமைப்புகளில் உள்ள நிறுவனங்கள் பற்றிய தகவல்களைப் பயன்படுத்தி கள ஆய்வுகளை நடத்துவதை ஊக்குவித்தல் போன்ற அடையாளம் காணப்பட்ட பிற செயல்பாடுகள் தொடர்பாக 2025 ஆம் ஆண்டில் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.
- ✓ ஊழியர் சேமலாப நிதியத்தின் அனுகூலங்களைச் செலுத்தும் முறையியலை எளிமையாக்குவதற்காக ஊழியர் சேமலாப நிதி விண்ணப்பப் படிவங்களில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள், தரவு முறைமைகளில் தரவுகளை உள்ளீடு செய்வது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் போன்றவை அடையாளம் காணப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## 2.2 கள ஆய்வுகளை நடத்துதல்

தொழில்தருநர்கள் தொழிலாளர்களை சேவையில் ஈடுபடுத்தும்போது சட்டங்களை சரியாகப் பின்பற்றுகிறார்களா என்பதைச் சோதிப்பதற்காக 2024.01.01 முதல் 2024.12.31 வரை நடத்தப்பட்ட ஆய்வுகள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

**படம் 2.2 – ஆய்வுகளை மேற்கொள்ளல் - 2024.01.01 முதல் 2024.12.31 வரை முன்னேற்றம்**

மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களில் தொழில் அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட தொழிலாளர் ஆய்வுகளின் எண்ணிக்கை = 92,266

பெண்களை இரவு நேர சேவையில் ஈடுபடுத்துதல் தொடர்பான ஆய்வுகளின் எண்ணிக்கை = 55

**மொத்தம் = 95,757**

சிறுவர்களை சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பாக கிடைத்த முறைப்பாடுகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை = 101

மீன்பிடித் துறை சார்ந்ததாக ஆபத்தான குழந்தைத் தொழில் மற்றும் குழந்தைத் தொழில் பற்றிய விசேட குழு ஆய்வுகளின் எண்ணிக்கை = 47

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் சம்பந்தமான ஆய்வுகளின் எண்ணிக்கை = 3288

மேலும், தொழிலாளர் ஆய்வு தகவல்களைச் சமர்ப்பிப்பதற்காக தொழில் அலுவலர்கள் பயன்படுத்தும் தொழிலாளர் ஆய்வு அறிக்கை, கூடுதல் தகவல்கள் கிடைக்கும் வகையில் திருத்தப்பட்டு, 2024 நவம்பர் முதல் பயன்படுத்த ஆரம்பிக்கப்பட்டது.

தொழில் அலுவலக அதிகாரப் பிரதேசங்களில் (குறிப்பாக நகர எல்லைகளில்) அமைந்துள்ள நிறுவனங்களின் ஆய்வை மிகவும் முறையான மற்றும் வினைத்திறனான முறையில் மேற்கொள்வதற்காக, ஒரு மாவட்ட தொழில் அலுவலகம் மாதந்தோறும் 04 கூட்டு ஆய்வுகளையும், உப தொழில் அலுவலகங்கள் மாதந்தோறும் 02 கூட்டு ஆய்வுகளையும் நடத்தும் முறை ஆரம்பிக்கப்பட்டது.

தற்போதைய சமூக-பொருளாதார சூழலுக்கு ஏற்றவாறு தொழிலாளர் ஆய்வு முறையை முறைப்படுத்துவதற்காக சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தொழில்நுட்ப உதவியைப் பெற அந்நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன் ஓர் ஆரம்ப கலந்துரையாடல் நடத்தப்பட்டது. அதன்படி, மிகவும் முறையான தொழிலாளர் ஆய்வு முறையொன்றை (Comprehensive Framework for Labour Inspections) 2025 ஆம் ஆண்டில் தயாரிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

## 2.3. தொழில்துறை உறவு

### 2.3.1 நியதிச் சட்ட உரிமைகளை மீறுதல் பற்றிய முறைப்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் தொழில் பிணக்குகளைத் தீர்த்தல்

தொழில் திணைக்களத்தின் மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களுக்கும் தலைமை அலுவலகத்துக்கும் தொழிலாளர்கள் அல்லது தொழிற்சங்கங்கள் ஆகியவற்றினால் மேற்கொள்ளப்பட்ட நியதிச்சட்ட உரிமை மீறல்கள் தொடர்பாகவும் தொழில் பிணக்குகள் தொடர்பாகவுமான முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்துடன், முறைப்பாட்டு விசாரணையில் அல்லது நிறுவன விசாரணையில் திருப்தியடையாத நபர் ஒருவரால் முறையான விசாரணையொன்றை செய்துகொள்வதற்காக தொழில் ஆணையாளர் நாயகத்திடம் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகள் தேவைக்கு ஏற்ப மறு விசாரணைக்காக ஆற்றுப்படுத்தப்பட்டன.

**வரைபடம் 2.1 -2019 ஆம் ஆண்டு முதல் 2024.12.31 வரை, நியதிச்சட்ட உரிமை மீறல்கள் குறித்த முறைப்பாடுகள் கிடைத்தல் மற்றும் தீர்க்கப்படுதல்**



**வரைபடம் 2.2 - 2019 ஆம் ஆண்டு முதல் 2024.12.31 வரை, தொழில் பிணக்குகள்குறித்த முறைப்பாடுகள் கிடைத்தல் மற்றும் தீர்க்கப்படுதல்**




தொழில் திணைக்களத்திற்கு முறைப்பாடொன்றை முன்வைக்க எதிர்பார்க்கும் தனியார்துறை அல்லது பகுதியளவு அரச துறையில் பணிபுரியும் ஒரு ஊழியர், தனது தொழில் தொடர்பான எவ்வகையான பிரச்சினை குறித்தும் https://cms.labourdept.gov.lk எனும் இ- சேவை மூலம் தொழில் திணைக்களத்திற்கு இணையவழி ஊடாக சமர்ப்பிப்பதற்கான வசதிகள் 2022 மார்ச் மாதம் முதல் ஏற்படுத்தப்பட்டது. அதன்படி, இந்த முறைப்பாட்டு முகாமைத்துவ முறைமைக்கு (Complaint Management System – CMS) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மொடியுள் (OSH Module) மற்றும் சட்ட மொடியுள் (Legal Module) என்பவற்றை உள்ளடக்கி தொடர்புடைய மென்பொருள் அபிவிருத்தி நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், தொழில் திணைக்களத்திற்குக் கிடைக்கும் முறைப்பாடுகள் மற்றும் மனுக்களைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையின்படி கையாள்வதன் மூலம் அந்நடவடிக்கைகளை மிகவும் வினைத்திறன் மிக்கதாகவும் தரமாகவும் மேற்கொள்ள முடியும். அதன்படி, தொழில் திணைக்களத்திற்குக் கிடைக்கும் முறைப்பாடுகள் மற்றும் மனுக்களைத் தீர்ப்பதற்கான வழிகாட்டியாக, முறைப்பாடுகள் மற்றும் மனுக்களைத் தீர்ப்பதற்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையொன்றும் அதற்கான அறிவுறுத்தல்களும் தயாரிக்கப்பட்டதோடு அந்த நடவடிக்கை முறைகள் 2021 நவம்பர் முதல் தொடர்புடைய அலுவலகங்கள் மற்றும் பிரிவுகளால் பயன்படுத்தப்படுகின்றன. இந்தச் செயல்பாடுகளை மேலும் திறம்படச் செய்வதற்காக சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தொழில்நுட்ப உதவியைப் பெற்று, தொழில் திணைக்களத்திற்குக் கிடைக்கும் முறைப்பாடுகள் மற்றும் மனுக்களுக்கு தீர்வு காண்பது தொடர்பான முறையான வழிகாட்டியொன்றைத்

(Comprehensive Guide for Handling of Inquiries on Labour related Complaints) தயாரிக்கும் பணிகளை 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.3.2 நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

பிராந்திய அலுவலகங்கள் அல்லது தலைமை அலுவலகத்தின் தொழில் உறவுகள் பிரிவு மூலம் தீர்க்கப்பட முடியாத தொழில் பிணக்குகள், நடுத்தீர்ப்பாயத்திற்கு அல்லது கைத்தொழில் நீதிமன்றமொன்றுக்கு அனுப்பப்படுகின்றன. 2024.01.01. முதல் 2024.12.31 வரையிலான காலகட்டத்தில் நடுத்தீர்ப்பாயத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட 81 பிணக்குகள் உட்பட 219 பிணக்குகள் தொடர்பில் 2024 இல் நடவடிக்கை எடுக்கப்படவிருந்தது. அவற்றுள் 111 பிணக்குகளுக்கான விசாரணை நடவடிக்கைகள் 2024-ம் ஆண்டு முடிக்கப்பட்டு 70 நடுத்தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதோடு 41 நடுத்தீர்ப்புகள் எதிர்காலத்தில் வழங்கப்பட உள்ளது. அதன்படி, 2024.12.31 ஆம் திகதியில் 108 பிணக்குகள் தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் இடம்பெற்று வந்தன.

### 2.3.3 கூட்டு ஒப்பந்தங்களுக்கு தொழில்தருநர் மற்றும் தொழிலாளர் ஆகிய இருதரப்பினரையும் தூண்டுதல்

கூட்டு ஒப்பந்தங்களில் நுழைவதன் மூலம், தொழிலாளர்களுக்கு தொழில் சட்டங்களால் வழங்கப்பட்ட உரிமைகளை விட அதிக சிறப்புரிமைகள் கிடைப்பது மட்டுமன்றி ஊழியர்களிடமிருந்து மிகவும் பயனுள்ள சேவையைப் பெறுவதற்கு தொழில்தருநர்கள் தொடர்புடைய நிபந்தனைகளை அடையவும் முடிகின்றது.

சமூக உரையாடல்கள் தொழில்தருநர்களையும் தொழிலாளர்களையும் அத்தகைய கூட்டு ஒப்பந்தங்களில் நுழைய ஊக்குவிக்கின்றன. 2024.01.01 முதல் 2024.12.31 வரையிலான காலப்பகுதியில் நீட்டிக்கப்பட்ட 14 கூட்டு ஒப்பந்தங்கள் உட்பட 2024.12.31இல் நடைமுறையில் உள்ள கூட்டு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 225 ஆகும்.

### 2.3.4 தொழிற்சங்கங்களைப் பதிவு செய்தல்

ஒவ்வொரு தொழிற்சங்கத்தையும் தொழில் திணைக்களத்தில் தொழிற்சங்கப் பதிவாளரிடம் பதிவு செய்வது தொழிற்சங்க கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டாயத் தேவையாகும். அதன்படி, 2024.01.01 முதல் 2024.12.31 வரை, திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களின் / சம்மேளனங்களின் எண்ணிக்கை 123 ஆகும். 2024 ஆம் ஆண்டில் 100 தொழிற்சங்கங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. அதன்படி, 2024.12.31 ஆம் திகதியில் காணப்பட்ட செல்லுபடியாகும் மொத்த தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 2141 ஆகும்.

### 2.3.5 வேலைநிறுத்தங்களைத் தீர்ப்பதற்கு உரிய தலையீடுகளைச் செய்தல்

ஒரு தொழில் பிணக்கு வேலைநிறுத்தமாக உருவாகும் சூழ்நிலைகள் காணப்பட்டால், அந்த நிலையைத் தடுக்க திணைக்களங்கள் தலையிடுவதோடு, வேலைநிறுத்தமொன்று இடம்பெற்றால், அவ் வேலை நிறுத்தம் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும். 2024.01.01 முதல் 2024.12.31 வரை பதிவாகிய வேலைநிறுத்தங்களின் விவரங்கள் பின்வருமாறு.

**அட்டவணை 2.1 - வேலைநிறுத்தங்கள் தொடர்பில் பதிவாகிய தரவுகள் - 2024.01.01 முதல் 2024.12.31 வரை**

| துறை | பதிவாகிய வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கேற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| தோட்டத் துறை | 04 | 1199 | 5879 |
| கட்டுமானத் துறை | - | - | - |
| உற்பத்தித் துறை | 08 | 6675 | 35,170 |
| சுரங்கம் மற்றும் அகழ்வுத் துறை | - | - | - |
| தங்குமிடங்கள் மற்றும் உணவு வழங்கல் துறை | - | - | - |
| பகுதியளவு அரச துறை | 01 | 260 | 5720 |
| ஏனைய சேவைகள் துறை | - | - | - |
| **மொத்தம்** | **13** | **8134** | **46,769** |

### 2.3.6 தொழில்தருநர் தொழிலாளர் ஆகிய இரு தரப்புக்கும் இடையே ஒரு உரையாடலைப் பராமரித்தல்

தனியார் துறை மற்றும் பகுதியளவு அரச துறை நிறுவனங்களில் தொழில்தருநர்- தொழிலாளர் இருதரப்பினரிடையேயும் தொழில் அமைதியை உறுதிப்படுத்தும் பணிச் சூழலை உருவாக்கும் நோக்கில், அந்தத் துறைகளில் உள்ள நிறுவனங்களின் தொழில்தருநர்- தொழிலாளர் இருதரப்பினருக்கும் சமூகக் கலந்துரையாடல், பணியிட ஒத்துழைப்பு மற்றும் தொழில் சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டன.

அதன்படி, 2024.01.01. முதல் 2024.12.31 வரை, சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்பு மேம்பாட்டுப் பிரிவு நடத்திய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள் பின்வருமாறு.

| நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை / பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **சமூக உரையாடலை ஊக்குவித்தல்** | சமூக உரையாடல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் | 155 | 9544 |
| | சமூக மேடை நிகழ்ச்சித்திட்டங்கள் | 24 | 2140 |

மேலே குறிப்பிடப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு மேலதிகமாக, நிறுவன ரீதியில் சமூகக் கலந்துரையாடலையும் பணியிட ஒத்துழைப்பையும் மேம்படுத்தும் நோக்கில், தொழில் நல்லிணக்கத்திற்கான சிறப்புச் சான்றிதழ்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கும் நடவடிக்கைகள் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டதோடு "தொழில் நல்லிணக்கத்திற்கான சிறப்புச் சான்றிதழ் வழங்கும் விழா" 2024.11.06 ஆம் திகதி தொழில் திணைக்களத்தின் 10 ஆவது மாடியில் உள்ள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



**புகைப்படம் 2.1 – தொழில் நல்லிணக்கத்திற்கான சிறப்புச் சான்றிதழ்கள் வழங்கும் விழாவின் புகைப்படம் - 2024.11.06**

தொழில்தருநர்கள் தொழில் சட்டங்களுடன் சுயமாக-இணங்குதல் ஒரு நிலையான தொழில்தருநர்-தொழிலாளர் உறவுக்கு வழிவகுப்பதோடு இதன்மூலம் தொழில்தருநர்களுக்கு பல பொருளாதார நன்மைகளும் கிடைக்கின்றன. எனவே தொழில் திணைக்களம் எல்லா நேரங்களிலும் தொழில் சட்டங்களுடன் தொழில்தருநர்களின் சுய-இணக்கத்தை ஊக்குவிக்க செயற்படுகிறது. அதன்படி, தொழில்தருநர்கள் தொழில் சட்டங்களுடன் சுய இணக்கத்தை காண்பிப்பதற்கான (Self Compliance to Labour laws) வேலைத்திட்டத்தை தயாரிப்பதற்கு, சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தொழில்நுட்ப ஆதரவைப் பெறுவதற்குத் தேவையான

ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு அதன் எதிர்கால நடவடிக்கைகள் 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.4. தொழிலாளர்களை சேவையில் ஈடுபடுத்துதல் தொடர்பான உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டப் பாதுகாப்பு

திணைக்களமானது தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பல சட்டங்களை நடைமுறைப்படுத்துகிறது. அதன்படி, அச் சட்டங்களை மீறும் தொழில்தருநர்கள் மீது தொழில் திணைக்களம் சட்ட நடவடிக்கை எடுத்து அதன் மூலம் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்றது. அதன்படி, 2024.01.01 முதல் 2024.12.31 வரை திணைக்களம் மேற்கொண்ட நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பான முன்னேற்றம் கீழே உள்ள அட்டவணையின்படி உள்ளது.

**வரைபடம் 2.4 - 2024.01.01 இலிருந்து 2024.12.31 வரைநீதவான் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை**




குறிப்பு - மேலே உள்ள அட்டவணை வினைப்படுத்தும் பிரிவின் நேரபி தலையீட்டால் உருவாக்கப்பட்ட நீதிமன்ற நடவபிக்கைகளின் (நீதவான் நீதி மன்றம் தவிர்த்து) விபரங்களைக் காட்டுகின்றது.

| நீதிமன்றம் | 2023.12.31 இல் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை | 2024.01.01 முதல் 2024.12.31 வரை மேன்முறையீடு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2024.12.31 இல் முடிந்த மேன்முறையீட்டு வழக்குகளின் எண்ணிக்கை | 2024.12.31இல் மீதமுள்ள மேன்முறையீட்டு வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| உயர் நீதிமன்றம் | 133 | 19 | 9 | 143 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 425 | 66 | 51 | 440 |
| மேல் நீதிமன்றம் | 107 | 23 | 26 | 104 |
| வணிக மேல் நீதிமன்றம் | 224 | 11 | 9 | 226 |

குறிப்பு - சட்ட நடவடிக்கைப் பிரிவின் நேரடி தலையீட்டின் பேரில் மேற்கொள்ளப்பட்ட நீதிமன்ற நடவடிக்கைகளின் விவரங்களை மேலே உள்ள அட்டவணை வழங்குகிறது.

தொழில் துறை தொடர்பான சட்டங்களை திருத்துதல் மற்றும் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துதல் ஆகியவற்றின் முன்னேற்றம் பின்வருமாறு.

| சட்டத்தின் பெயர் | திருத்தத்தின் நோக்கம் |
|---|---|
| 2024 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கடை, அலுவலக ஊழியர்(ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) திருத்தச் சட்டம் | தகவல் தொழில்நுட்பத்தின் மீது அடிப்படையாக அமைந்த வணிகச் செயல்முறைகள் மற்றும் அறிவுச் செயல்முறைகள் புற ஒப்படைப்பு (அவுட்சோர்ஸ்) செய்யப்பட்ட நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள பணியாளர்களை இரவு நேரங்களில் சேவையில் ஈடுபடுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் வகையில், 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தை திருத்துதல். |
| 2024 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனம் (திருத்தச்) சட்டம் | 2024.09.11 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வேலையாளர்களின் குறைந்தபட்ச மாதாந்த வேதனம் ரூ. 12,500.00 முதல் ரூ. 17,500.00 வரையும் மற்றும் குறைந்தபட்ச தினசரி வேதனம் ரூ. 500.00 முதல் ரூ.700.00 வரையும் அதிகரிக்கப்படுதல். |

## 2.5 தொழில் தரங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்

தனியார் துறை ஊழியர்களின் சம்பளம் மற்றும் சேவை நிபந்தனைகளை இற்றைப்படுத்துதல் மற்றும் அந்த உரிமைகளைப் பாதுகாத்தல் என்பன திணைக்களத்தின் முன்னணிப் பணியாகும். அதன்படி, 2024.01.01 முதல் 2024.12.31 வரை, அந்த விடயத்துறை சார்ந்ததாக பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### 2.5.1 சம்பளச் சபைகளின் குறைந்தபட்ச சம்பளங்களை இற்றைப்படுத்துதல்

| சம்பளச் சபை | குறைந்தபட்ச சம்பளங்களை இற்றைப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|
| 1. தேயிலைச் செய்கை மற்றும் உற்பத்திக் கைத்தொழில் | கால அளவீட்டு வேலைக்கான குறைந்தபட்ச தினசரி வேதனம் ரூ.1350.00 ஆகவும் நியம அளவை விட அதிகமாக பறிக்கப்படும் தேயிலைக் கொழுந்து ஒவ்வொரு கிலோவுக்கும் (Over Kilo Rate) ரூ.50.00 ஆக நாளாந்த கொடுப்பனவும் திருத்தப்பட்டது. (இத் தீர்மானம் 2024.09.10 ஆம் திகதி முதல் அமுலில் உள்ளது.) |
| 2. இறப்பர் செய்கை மற்றும் மூல இறப்பர் பதப்படுத்தும் கைத்தொழில் | கால அளவீட்டு வேலைக்கான குறைந்தபட்ச தினசரி வேதனம் ரூ.1350.00 ஆகவும் நியம அளவை விட அதிகமாக எடுத்து வரப்படும் இரப்பர் பால் ஒவ்வொரு கிலோவுக்கும் (Over Kilo Rate) ரூ.50.00 ஆக நாளாந்த கொடுப்பனவும் திருத்தப்பட்டது. (இத் தீர்மானம் 2024.09.10 ஆம் திகதி முதல் அமுலில் உள்ளது.) |

### 2.5.2 05 நாள் வேலை வாரத்திற்கு ஒப்புதல் வழங்கப்படுதல்

| 2024.01.01 முதல் 2024.12.31 வரை | | | 2024.12.31 ஆம் திகதியில் ஒப்புதலுக்காக மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| கிடைத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை | ஒப்புதல்களின் எண்ணிக்கை | நிராகரிப்புகளின் எண்ணிக்கை | |
| **339** | **320** | **(08)** | **11** |

### 2.5.3 கூட்டு ஒப்பந்தங்களின் சட்டபூர்வமான செல்லுபடித்தன்மையைச் சோதித்தல்

| 2024.01.01 முதல் 2024.12.31 வரை | | | 2024.12.31 ஆம் திகதியில் சோதிக்கப்பட்டு வந்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| கிடைத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை | ஒப்புதல்களின் எண்ணிக்கை | நிராகரிப்புகளின் எண்ணிக்கை | |
| **39** | **21** | **-** | **18** |

### 2.5.4 சம்பளச் சபை கட்டளைச் சட்டம் மற்றும் கடை, அலுவலக ஊழியர் சட்டத்தின் கீழ் சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்வதற்கான கோரிக்கைகளுக்கு ஒப்புதல் அளித்தல்

| 2024.01.01 நிலவரப்படி நிலுவை | 2024.01.01 முதல் 2024.12.31 வரை | | | 2024.12.31 நிலவரப்படி நிலுவை |
|---|---|---|---|---|
| | கிடைத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை | ஒப்புதல்களின் எண்ணிக்கை | நிராகரிப்புகளின் எண்ணிக்கை | |
| **119** | **262** | **124** | **(128)** | **129**<br>(முழுமையடையாத ஆவணங்களைச் சமர்ப்பித்த இந்த 129 நிறுவனங்களுக்கு உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது) |

**2.5.5 சட்டங்கள் தொடர்பாக தொழில்தருநர்கள் மற்றும் தொழிலாளர்களால் செய்யப்படும் விசாரணைகளுக்கு விளக்கங்கள் மற்றும் பொருள்கோடல்களை வழங்குதல்.**

| 2024.01.01 முதல் 2024.12.31 வரை | | 2024.12.31 இல் பதில் தயாரிக்கப்பட்டு வந்த நிலுவை |
|---|---|---|
| கிடைத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை | பதில் வழங்கப்பட்ட எண்ணிக்கை | |
| **70** | **69** | **01** |

## 2.6. உழைக்கும் பெண்கள் மற்றும் இளைஞர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் குழந்தைத் தொழிலாளர் முறையை இல்லாதொழித்தல்

பெண்களை சேவையில் ஈடுபடுத்தும்போது அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் தொழில் சட்டங்களை நடைமுறைப்படுத்துதல், அந்தச் சட்டங்களை அவ்வப்போது மதிப்பாய்வு செய்து தேவையான திருத்தங்களை பரிந்துரைப்பதன் மூலம் நாட்டிற்கு பயனுள்ள பெண் ஊழியத்தை வழங்குதல் மட்டுமன்றி இலங்கையில் இருந்து குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அதன்படி, பின்வரும் நடவடிக்கைகள் 2024.01.01 முதல் 2024.12.31 வரை மேற்கொள்ளப்பட்டன.

### 2.6.1 குழந்தைத் தொழிலாளர்கள் தொடர்பாக கிடைத்த முறைப்பாடுகளை விசாரணைகளை மேற்கொள்ளல்

| 2024.01.01 நிலவரப்படி நிலுவை | 2024.01.01 முதல் 2024.12.31 வரை | | 2024.12.31 நிலவரப்படி நிலுவை |
|---|---|---|---|
| | கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | |
| **13** | **100** | **101**<br>(இவற்றுள் குழந்தைத் தொழிலாளர்கள் இருப்பது வெளிக்கொணரப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 02 என்பதோடு அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.) | **12** |

**2.6.2 இரவு நேரத்தில் பெண்களை சேவையில் அமர்த்துவது தொடர்பான சேவை நிபந்தனைகளை மீறுவது தொடர்பாக கிடைத்த முறைப்பாடுகள் மீதான விசாரணைகள்**

| 2024.01.01 நிலவரப்படி நிலுவை | 2024.01.01 முதல் 2024.12.31 வரை | | 2024.12.31 நிலவரப்படி நிலுவை |
|---|---|---|---|
| | கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | |
| **02** | **07** | **09** | **-** |

### 2.6.3 பெண்களை இரவு நேர சேவையில் ஈடுபடுத்துவதற்காக அனுமதி வழங்குதல்



- அனுமதி வழங்கப்படுதல்

**751**

### 2.6.4 இலங்கையில் இருந்து குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்கும் கருத்திட்டத்தின் கீழ் 2024.01.01 முதல் 2024.12.31 வரை மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் பற்றிய தகவல்கள்

**(அ) இலங்கையில் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்காக சமுதாய பொலிஸ் குழுக்களுடன் இணைந்து பணியாற்றுதல்**

குழந்தைத் தொழிலாளர் முறையை இல்லாதொழித்தல் மற்றும் பிரஜைகளின் பொறுப்பு என்ற செய்தியை தரை மட்டத்திற்குக் கொண்டு செல்லும் நடவடிக்கைகளை இலங்கை பொலிஸின் சமுதாய பொலிஸ் குழுக்களின் ஊடாக மேற்கொள்வது மிகவும் நடைமுறைக்குரியது என இனங்காணப்பட்டது. அதன்படி, 2024ஆம் ஆண்டு கொழும்பு மாவட்டத்தையும், 2025ஆம் ஆண்டு முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் இந்த தேசியப் பொறுப்புக்கு ஒத்துழைக்க தீர்மானிக்கப்பட்டது.

இதன் முதற்கட்டமாக கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த சமுதாயப் பொலிஸ் பிரிவுகளின் நிலையப் பொறுப்பதிகாரிகள், அதன் கீழ் இயங்கும் சமுதாயப் பொலிஸ் பிரிவுகளின் பொறுப்பதிகாரிகள் மற்றும் தொழில் திணைக்களத்தின் சம்பந்தப்பட்ட பிரதி மற்றும் உதவி தொழில் ஆணையாளர்களுக்காக பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் அமர்வொன்றை நடாத்தி அவர்களை விழிப்பூட்டி அதனூடாக இலங்கை பொலிஸின் சமுதாய பொலிஸ் குழுக்களுடன் இணைந்து அனைத்து வகையிலுமான குழந்தைத் தொழில் வகைகளையும் இலங்கையில் முழுமையாக இல்லாதொழிக்கும் செய்தியை தரை மட்டத்திற்குக் கொண்டு செல்லும் நடவடிக்கைகள் 2024 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் தொடங்கப்பட்டது.

**புகைப்படம்- 2.2 அவிசாவளை சமுதாய பொலிஸ் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டமொன்றின் புகைப்படம்**

**2024 .12. 27**



அதன் இரண்டாம் கட்டமாக, தொழில் திணைக்களத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், கொழும்பு மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பொலிஸ் நிலையத்துக்குமான 52 சமூக பொலிஸ் ஆலோசனைக் குழுக்களுடன் இணைந்து பொலிஸ் நிலைய மட்டத்தில் உள்ள அனைத்து ஆலோசனைக் குழு உறுப்பினர்களையும் விழிப்புணர்வூட்டும் வகையில் நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் 2024.12.10 ஆம் திகதி முன்னேற்ற மீளாய்வுக் கூட்டமொன்றின் மூலம் சோதிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது.





அதன் மூன்றாம் கட்டமாக, 2025 ஆம் ஆண்டு முழு நாடும் உள்ளடங்கும் வகையில் இந்தப் பொறுப்பை நடைமுறைப்படுத்துவதற்கான செயல்முறையை விளக்கும் விசேட நிகழ்ச்சியொன்று 2024.12.18 ஆம் திகதி நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் இலங்கை பொலிஸின் சமுதாயப் பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர், சமுதாயப் பொலிஸ் மற்றும் சுற்றாடல் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர், நாட்டிலுள்ள அனைத்து பொலிஸ் பிரிவுகளின் சமுதாயப் பொலிஸ் குழுக்களுக்குப் பொறுப்பான அனைத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் தொழில் திணைக்களத்தின் அனைத்து வலய பிரதி தொழில் ஆணையாளர்கள், மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர்கள் மற்றும் சிரேஷ்ட தொழில் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**(ஆ) முறைசார் துறைகளில் குழந்தைத் தொழிலாளர்களை சேவையில் அமர்த்த மாட்டோம் என்பதற்கான உறுதிமொழிகளைப் பெறுதல்**

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12 ஆம் திகதி கொண்டாடப்படுகின்ற 'உலக குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினத்திற்கு' நேரொத்ததாக, தொழில் திணைக்களம் ஒரு கொண்டாட்ட நிகழ்ச்சியை 2024.06.18 ஆம் திகதி நடத்தியது. அங்கு, முறைசார் துறைகளில் உள்ள நிறுவனங்களின் தொழில்தருநர்களிடம், குறிப்பாக கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழ் உள்ள கைத்தொழில் பூங்காக்களில் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்களின்

தொழில்தருநர்களிடம் குழந்தைத் தொழிலாளர்களை பயன்படுத்த மாட்டோம் என உறுதிமொழி பெறும் நிகழ்ச்சித்திட்டம் தொடங்கப்பட்டது. அதற்கு நேரொத்ததாக திணைக்களத்தின் அதிகாரப்பூர்வ இணையத்தளம் மூலம் QR குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டு நாட்டில் உள்ள அனைத்து நிறுவனங்களிடமிருந்தும் குழந்தைத் தொழிலாளர்களைப் பயன்படுத்த மாட்டோம் என்று உறுதிமொழி பெறுவதற்கான நடவடிக்கைகளும் தொடங்கப்பட்டன.

மேலும், கள ஆய்வில் ஈடுபட்டுள்ள தொழில் அலுவலர்கள், முறைசாரா துறையை முன்னிறுத்தி, குழந்தை தொழிலாளர்களைப் பயன்படுத்த மாட்டோம் என, மற்ற அனைத்து துறைகளிலும் உள்ள தொழில்தருநர்ளிகளிடம் உறுதிமொழி பெறும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டன.

### 2.6.4 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்

பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான தொழில் சட்டங்கள் குறித்து தனியார் மற்றும் பகுதியளவு அரச துறை நிறுவனங்களின் தொழில்தருநர்கள் - தொழிலாளர்களை விழிப்புணர்வூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மட்டுமன்றி கடமைகளைச் செய்யும்போது பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான தொழில் சட்டங்கள் குறித்து விழிப்புணர்வு பெற வேண்டிய ஏனைய அரசு நிறுவனங்களின் அதிகாரிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் திணைக்களம் ஏற்பாடு செய்தது. அதன்படி, 2024.01.01 முதல் 2024.12.31 வரை பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரப் பிரிவினால் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு.

**அட்டவணை 2.2 - 2024.01.01 முதல் 2024.12.31 வரை பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரப் பிரிவினால் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின்**

| நிகழ்ச்சித்திட்டங்களின் தன்மை | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை / பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **பெண்கள் மற்றும் இளைஞர்களை சேவையில் ஈடுபடுத்தும் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல்** | பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான தொழில் சட்டங்கள் குறித்து தனியார் துறை பெண் ஊழியர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் | 12 | 418 |
| | ஆபத்தான குழந்தைத் தொழில் மற்றும் குழந்தைத் தொழில் பற்றிய விசேட குழு விசாரணைகளுக்கு | 47 | 2176 |

| | | | |
|---|---|---|---|
| | நேரொத்தாக மீன்பிடித் துறைசார்ந்த சமுதாயத்தில் ஆபத்தான குழந்தைத் தொழில் மற்றும் குழந்தைத் தொழில் பற்றிய சட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வூட்டல்கள் | | |
| | தேயிலை மற்றும் பெருந்தோட்ட பயிர்த் துறை மற்றும் கைத்தொழில் துறையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்தருநர்களுக்கு ஆபத்தான குழந்தைத் தொழில் மற்றும் குழந்தைத் தொழில் பற்றிய சட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வூட்டல் | 62 | 1532 |
| | கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த சமுதாயப் பொலிஸ் பிரிவுகளுக்குப் பொறுப்பான நிலையப் பொறுப்பதிகாரிகள், அவற்றின் கீழ் இயங்கும் சமுதாயப் பொலிஸ் பிரிவுகளின் நிலையத் பொறுப்பதிகாரிகள், தொழில் திணைக்களத்தின் சம்பந்தப்பட்ட பிரதி தொழில் ஆணையாளர்கள் மற்றும் உதவித் தொழிலாளர் ஆணையாளர்களுக்கு குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு மற்றும் பிரஜைகளின் பொறுப்பு பற்றிய செய்தியை தரை மட்டத்திற்குக் கொண்டு செல்வது தொடர்பான விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம். | 01 | 142 |
| | சமுதாயப் பொலிஸ் ஆலோசனைக் குழுக்களுடன் இணைந்து, தொழில் திணைக்கள அதிகாரிகள் இணைந்து ஆலோசனைக் குழு உறுப்பினர்களுக்கு ஆபத்தான குழந்தைத் தொழில் மற்றும் குழந்தைத் தொழில் பற்றிய சட்டங்கள் தொடர்பில் விழிப்புணர்வூட்டல். | 14 | 587 |

## 2.7 தொழிலாளர்களின் தொழில்சார் பாதுகாப்பிற்காக கண்ணியமான பணிச்சூழலை உறுதிப்படுத்துதல்

தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பௌதீக ரீதியாக ஏற்படும் உடல் உபாதைகள் மற்றும் விபத்துகளை குறைக்க வேண்டியது தொழில் திணைக்களத்தின் பொறுப்பாகும். இலங்கையில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன் தொடர்பில் 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

பாதுகாப்பான பணிச்சூழலை உறுதி செய்வதற்காக திணைக்களம் முக்கியமாக பின்வரும் நடவடிக்கைகளை 2024.01.01 முதல் 2024.12.31 வரை மேற்கொண்டது.




**தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் புதிய ஒழுங்குவிதிகளின் கீழ் 2221 தொழிற்சாலைகள் 2024.01.01 முதல் 2024.12.31 வரை பதிவு செய்யப்பட்டன. அதன்படி, 2024.12.31 ஆம் திகதியில் தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் புதிய ஒழுங்குவிதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 6614 ஆகும்.**

**2024.01.01 முதல் 2024.12.31 வரை ஆய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடங்களின் எண்ணிக்கை 244 ஆகும்.**






**மாவட்ட தொழிற்சாலை ஆய்வுப் பொறியாளர்கள் 2024.01.01 முதல் 2024.12.31 வரை 2578 தொழிற்சாலைகளை சோதனை செய்துள்ளனர்.**

**2024.01.01 முதல் 2024.12.31 வரை பதிவாகியுள்ள ஆய்வு செய்யப்பட்ட மரணத்தை ஏற்படுத்தக்கூடிய விபத்துகளின் எண்ணிக்கை 47 ஆகும் என்பதோடு மரணத்தை ஏற்படுத்தாத விபத்துகளின் எண்ணிக்கை 1606 ஆகும்.**





**2024.01.01 முதல் 2024.12.31 வரை அதிகாரம்வாய்ந்த அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட அதிக ஆபத்துள்ள இயந்திரங்களின் ஆய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை 11,965 ஆகும்.**

தொழில்சார் பாதுகாப்பு குறித்து தொழில்தருநர் தொழிலாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து நடத்துவதன் மூலம், பணியிட விபத்துகளை குறைத்துக்கொள்வதற்கும் பாதுகாப்பான பணிச்சூழலை உருவாக்கிக் கொள்ளவும் முடியும். அதன்படி, 2024.01.01 முதல் 2024.12.31 வரை, தொழில்துறை பாதுகாப்புப் பிரிவினால் நடத்தப்பட்ட தொழில்தருநர் தொழிலாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் விவரங்கள் பின்வருமாறு.

**அட்டவணை 2.3 - 2024.01.01 முதல் 2024.12.31 வரை, தொழில்துறை பாதுகாப்புப் பிரிவினால் நடத்தப்பட்ட தொழில்தருநர் தொழிலாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் விவரங்கள**

| நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை / பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **தொழில்சார் பாதுகாப்பை மேம்படுத்துதல்** | தொழில்சார் பாதுகாப்பு பற்றி நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் (ஆடை, உற்பத்தி, பெருந்தோட்ட, கட்டுமானம் போன்ற துறைகளை உள்ளடக்கும் வகையில்) | 115 | 5288 |

- **தொழிலாளர் பாதுகாப்பை மேம்படுத்த இருதரப்பு பாதுகாப்புக் குழுக்களை அமைத்தல்**

தொழிற்சாலைகளில் தொழில்சார் பாதுகாப்பை உறுதி செய்வதன் மூலம் பாதுகாப்பு கலாச்சாரத்திற்கு வழிவகுப்பது இருதரப்பு பாதுகாப்பு குழுக்களை நிறுவுவதன் பிரதான நோக்கமாகும்.

அனைத்து தொழில் துறைகளையும் உள்ளடக்கும் வகையில் 2024.01.01 முதல் 2024.12.31 வரையிலான காலப்பகுதியில் 202 இருதரப்பு பாதுகாப்பு குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. அதன்படி, 2024.12.31 ஆம் திகதி வரை நிறுவப்பட்டுள்ள மொத்த இருதரப்பு பாதுகாப்பு குழுக்களின் எண்ணிக்கை 877 ஆகும்.

- **தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் தொழில்தருர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்கையில் பயன்படுத்துவதற்காக பயிற்சி மொடியுள்களை உருவாக்குதல்**

கட்டுமானத் துறையில் தொழிலசார் பாதுகாப்பு, மின் பாதுகாப்பு, இயந்திரப் பாதுகாப்பு மற்றும் இரசாயனப் பொருள் பாதுகாப்பு ஆகிய 04 துறைகள் குறித்து தொழில்தருநர்கள் மற்றும்

தொழிலாளர்களை விழிப்புணர்வூட்டும்போது பயன்படுத்துவதற்காக தனித் தனி வரைவு பயிற்சி மொடியுள்கள் தயாரிக்கப்பட்டன. அதன் எதிர்காலப் பணிகள் 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.8 தொழிலாளர்களின் தொழில்சார் சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்

பணியிடங்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, பணியிடங்களில் சுகாதாரப் பிரச்சினைகள் மற்றும் விபத்துகள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளனவா என்பதை அறிவியல் முறைகளின் கீழ் ஆய்வு செய்து, அந்த விபத்துகளைத் தடுக்க நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவற்றைத் தடுக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விழிப்பூட்டுதல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்படி பின்வரும் நடவடிக்கைகள் 2024.01.01 முதல் 2024.12.31வரை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| **படம் 2.3 - 2024.01.01முதல் 2024.12.31 வரையிலான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள்** | |
|---|---|
|  | சுற்றுச்சூழல் அளவீடுகளின் எண்ணிக்கை = 233 |
| | உயிரியல் சோதனைகளின் எண்ணிக்கை = 236 |
| | தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு கணக்காய்வுகளின் எண்ணிக்கை = 241 |

| **அட்டவணை 2.4 - 2024.01.01முதல் 2024.12.31வரையிலான காலப்பகுதியில் பல்வேறு நிறுவனங்களில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் பிரச்சினையான நிலைமைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்** | |
|---|---|
| **தலையீடுகள் செய்யப்பட்டு பிரச்சினையான நிலைமைகள் தீர்க்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை** | **செயல்பாடு நிறைவு** |
| 08 | முக்கியமாக 08 நிறுவனங்களில் ஏற்பட்ட தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான பிரச்சினையான நிலைமைகளுக்குத் தேவையான தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டு அந்த நிலைமைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்மூலம், 1752 ஊழியர்களின் தொழிலசார் பாதுகாப்பு மற்றும் சுகாதார உரிமைகள் தொடர்பான தரங்களைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. |

2024.01.01 முதல் 2024.12.31வரை தொழில் சுகாதாரப் பிரிவு நடத்திய தொழில்தருநர் தொழிலாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் விவரங்கள் பின்வருமாறு.

| **அட்டவணை 2.5 - 2024.01.01 முதல் 2024.12.31வரை தொழில் சுகாதாரப் பிரிவு நடத்திய தொழில்தருநர் தொழிலாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் விவரங்கள்** | | | |
|---|---|---|---|
| **நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை** | **நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்** | **நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை** | **பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை / பயனாளிகளின் எண்ணிக்கை** |
| **தொழில்சார் சுகாதார மேம்பாடு** | தொழில்தருநர்கள் மற்றும் தொழிலாளர்களுக்காக ஒழுங்கு செய்து நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 92 | 1101 |
| | தள ஆய்வுக்குப் பின்னர் தொழில்தருநர்கள் மற்றும் தொழிலாளர்களுக்காக நடத்தப்பட்ட களப் பயிற்சி (On the spot field trainings) நிகழ்ச்சித்திட்டங்கள் | 173 | 2832 |

மேலும், மேல் மாகாணத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களின் பணிச்சூழல் நிலைமை (ஒலி, ஒளி, வெப்பம், காற்றோட்டம் போன்றவை) தரப்படுத்தப்பட்ட நிலைக்கு கொண்டு வருவதற்கான கருத்திட்டம் 2024 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அதன்படி, மேல் மாகாணத்தில் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பின்வரும் தொழிற்பேட்டைகளில் இக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

- **கொழும்பு மாவட்டத்தில்** - கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பானலுவ கைத்தொழில் குடியிருப்பு மற்றும் பனாகொட Templeburg கைத்தொழிற்பேட்டை
- **கம்பஹா மாவட்டத்தில்** - கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஏக்கல கைத்தொழில் குடியிருப்பு
- **களுத்துறை மாவட்டத்தில்** - நாகொட Fulerton கைத்தொழிற்பேட்டை, ஹொரண வவுலகல கைத்தொழிற்பேட்டை மற்றும் ஹொரண அரமனாகொல்ல கைத்தொழிற்பேட்டை

இக் கருத்திட்டத்திற்கான அடிப்படை ஆய்வு நடவடிக்கைகளின் போது தொழிற்சாலைகளில் உள்ள மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை, உற்பத்தி, மூலப்பொருட்கள், வேலை நேரம், ஊழியர் நலன்புரி வசதிகள் மற்றும் சுற்றுச்சூழல் நிலைமைகள் (ஒளி மட்டம், ஒலி அளவு,

வெப்பம் (Wet Bulb Globe Temperature – WBGT) முதலியன) பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டன. மேலும், சுற்றுச்சூழல் நிலைமை குறித்து எடுக்கப்பட்ட அளவீடுகளின்படி, நியம மட்டத்திலிருந்து விலகல் சந்தர்ப்பங்கள் அடையாளம் காணப்பட்டு, பணிச்சூழல் நிலைமைகளை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்து தொழில்தருநர்கள் மற்றும் தொழிலாளர்களை விழிப்புணர்வூட்டுதல் மற்றும் பரிந்துரைகள் வழங்கப்படுதல் மேற்கொள்ளப்பட்டன.

## 2.9 திணைக்களத்தின் வலைத்தளம்




தொழில் திணைக்களத்தின் புதிய அதிகாரப்பூர்வ வலைத்தளம் (www.labourdept.gov.lk) 2024.06.18 ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்டது. சேவை பெறுநர்களுக்குத் தேவையான விண்ணப்பப் படிவங்கள், மாதிரிப் படிவங்கள், அறிவுறுத்தல்கள் மற்றும் தொழில் சட்டங்கள் மற்றும் தொழில்தருநர்கள் பின்பற்ற வேண்டிய சம்பளச் சபை தீர்மானங்கள் உள்ளிட்ட தேவையான ஆவணங்கள் பதிவிறக்கம் செய்யக்கூடியவாறு இந்த வலைத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதோடு அத்தகவல்கள் தொடர்ந்து இற்றைப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மேலும், திணைக்களத்தின் இ-சேவைகளைப் பெறும் வசதியும் இதில் சேர்க்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது.

## 2.10 திணைக்களத்தின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக நடவடிக்கைகள்

பொதுமக்களுக்கு புதுப்பிக்கப்பட்ட தகவல்களை வழங்குவதற்காக அதிகாரப்பூர்வ யூடியூப் சேனல், பேஸ்புக் பக்கம் மற்றும் ட்விட்டர் கணக்கு ஆகியவற்றை திணைக்களம் பராமரிக்கிறது.

| | |
|---|---|
| YouTube Channel | Subscribers: 1.87K |
| | Number of Videos included : 130 |
| Facebook Page | Followers: 1.5K |
| Twitter | Followers: 105 |

## 2.11 தொழில் திணைக்களத்தின் நூலகம்

தொழில் துறைக்கான சட்டங்கள், புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள் தொடர்பில் இலங்கையில் காணப்படுகின்ற பிரதான நூலகத்தை தொழில் திணைக்களம் பேணிவருகிறது. இது தொழில் திணைக்களம், தொழில் அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள பிற நிறுவனங்களின் ஊழியர்களுக்கும், வெளி வாசகர்களுக்கும் தொழில் சட்டத் துறையுடன் தொடர்புடைய அனைத்து சட்டங்கள், புத்தகங்கள், வெளியீடுகள் போன்றவற்றைக் பரிசீலிப்பதற்கான வசதிகளை வழங்குகிறது.

நூலக வசதிகளை மேலும் மேம்படுத்த, நூலக தரவு முகாமை அமைப்பு KOHA மென்பொருள்) நிறுவும் பணிகள் 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.12 தகவல் தொடர்பாடல் நடவடிக்கைகள்

### 2.12.1 வெளியீடுகள் பற்றிய நடவடிக்கைகள்




- **கத்திகாவ இதழ்**

நிறுவனங்களில் தொழில்தருநர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே நட்புறவை மேம்படுத்துவதற்குத் தேவையான அறிவை வழங்குவதன் மூலம் பிணக்குகளைக் குறைப்பதில் பங்களிப்பதே கதிக்காவ இதழை வெளியிடுவதன் நோக்கமாகும். அதன்படி, 2024 ஆம் ஆண்டிற்கான கதிக்காவ இதழின் 23வது தொகுதி 2024 டிசம்பரில் வெளியிடப்பட்டது.

- தொழில் திணைக்களத்தினால் நிறைவேற்றப்படும் பணிப்பொறுப்பு மற்றும் தொழில்

சட்டங்கள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை மேம்படுத்தவதற்காக AI Chatbot தயாரிப்பு மற்றும் தொழில் சட்டத் துறை தொடர்பில் அதிகாரிகளின் அறிவை மேம்படுத்துவதற்காக Self Learning Module தயாரிப்பு என்பவற்றுக்காக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் தொழில்நுட்ப உதவியுடன் 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட எதிர்பார்க்கப்படுகிறது.

### 2.12.2 தொழில் துறை தொடர்பான ஆய்வுகள் மற்றும் கற்கைகள்

- **வேலை மணித்தியாலங்களும் ஊழியக் கிரயமும் பற்றிய மதிப்பாய்வு**

இந்த மதிப்பாய்வின் மூலம் நாட்டின் அபிவிருத்தி மூலோபாயங்களைத் உருவாக்குவதற்குத் தேவையான ஊழியக் கிரயம், வேலை மணித்தியாலங்கள் மற்றும் சராசரி ஈட்டல்கள் பற்றிய தரவுகள் பெறப்படுகின்றன. இது அரசு மற்றும் தனியார் துறைகளில் திட்டமிடல் மற்றும் தீரமானங்களை மேற்கொள்ளல் மற்றும் தொழில்தருநர்கள் தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்கான எதிர்கால திட்டங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்கும். வேலை மணித்தியாலங்கள் மற்றும் ஊழியக் கிரயம் பற்றிய ஆய்வின் 2023-ம் ஆண்டு தொடர்பான தரவுகளின் கணினிமயமாக்கல் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. மேலும், 2024 ஆம் ஆண்டு தொடர்பான தகவல்களைப் பெறுவதற்காக, வினாக்கொத்துகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தபாலில் அனுப்பும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.




- **தனியார் மற்றும் பகுதியளவு அரச துறை வேலைவாய்ப்பு பற்றிய வருடாந்த ஆய்வு - 2022 (Annual Survey of Private and Semi-Government Sector Employment - 2022)**

இந்த அறிக்கையின் மூலம் தனியார் துறை மற்றும் பகுதியளவு அரச துறை ஊழியர்கள் சராசரியாக ஒரு வாரத்தில் வேலை செய்யும் மணித்தியாலங்களின் எண்ணிக்கை, சராசரி மாதாந்த பெயரளவிலான வருமானம், சராசரி மாதாந்த உண்மையான வருமானம், ஊழியக் கியரம் போன்ற தகவல்கள் பாலினம் மற்றும் தொழிலின் அடிப்படையில் வெளியிடப்படுகின்றன.

- **குழந்தைத் தொழிலாளர் பற்றிய ஆய்வு 2024 - கொழும்பு மாவட்டம்**




கொழும்பு மாவட்டத்தில் குழந்தைத் தொழிலாளர்கள் பற்றிய புரிதலைப் பெறுதல், குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தல், குழந்தைத் தொழிலாளர்களைக் கொண்ட குடும்பங்களின் சமூகப் பொருளாதார நிலை குறித்த தரவுகளைச் சேகரித்தல் மற்றும் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்யும் நோக்கில் 2024-ம்

ஆண்டு குழந்தைத் தொழிலாளர் குறித்த ஆய்வு நடத்தப்பட்டது.

இந்த ஆய்வுக்காக, கொழும்பு மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்கிய 100 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இருந்து 1000 வீட்டு அலகுகளின் மாதிரி தெரிவு செய்யப்பட்டது. அதற்காக, எளிய சமவாய்ப்பு மாதிரி முறை மற்றும் முறைசார் மாதிரி முறைகள் பயன்படுத்தப்பட்டதோடு தரவுகளை சேகரிக்க வீட்டு அலகு ஆய்வு முறை மற்றும் விரைவான மதிப்பீட்டு முறை ஆகியவை பயன்படுத்தப்பட்டன.

தரவுகள் சேகரிக்கப்பட்டதன் பின்னர் ஆய்வின் முடிவுகள் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்புக்கான தேசிய வழிகாட்டுதல் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டதோடு ”குழந்தைத் தொழிலாளர் பற்றிய ஆய்வு 2024 - கொழும்பு மாவட்டம்'' அறிக்கை தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டது.

- **A study on the impact of Factory Inspections on Legal Compliance and Occupational Safety & Health Standards in Industries (Pilot Project conducted by Industrial Safety Division and Occupational Hygiene Division of the Department of Labour)**

தொழில் திணைக்களத்தின் தொழில்துறை பாதுகாப்புப் பிரிவு மற்றும் தொழில் சுகாதாரப் பிரிவு இணைந்து நடத்திய இந்த ஆய்வில், தொழிற்சாலைகளுக்கான பதிவில் உள்ள குறைபாடுகள், விபத்துகள் பற்றிய தகவல்களை உள்ளடக்குவதற்காக பயன்படுத்தப்படும் பொதுப் பதிவேட்டினை பராமரிப்பதில் உள்ள குறைபாடுகள் மற்றும் முதலுதவி வசதிகளில் உள்ள குறைபாடுகள் போன்ற கைத்தொழிற்சாலைகளில் காணப்பட்ட குறைபாடுகளுடன் கூடிய பிரிவுகள் கண்டறியப்பட்டன. அதன்படி, எதிர்காலத்தில் அத்தொழிற்சாலைகளில் காணப்பட்ட குறைபாடுகளைக் குறைக்கும் வகையில், இந்த ஆய்வு அறிக்கை அளிக்கும் பரிந்துரைகளின் அடிப்படையில், எடுக்கக்கூடிய எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் செயற்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து 2025ம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.12.3 பிரதான கொண்டாட்டங்களை நடத்துதல்

- **சர்வதேச மகளிர் தின விழா நிகழ்ச்சி 2024**

2024.03.08 ஆம் திகதி கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்திற்கு ஒருங்கமைவாக தொழில் திணைக்களம் ஏற்பாடு செய்த மகளிர் தின விழா நிகழ்ச்சி 2024.03.07 ஆம் திகதி தொழில் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.



”பெண்களுக்கு ஏற்புடைய தொழில் சட்டம்” தொடர்பில் சமூக ஊடகங்கள் மூலம் சமுதாயத்தை விழிப்பூட்டுவதற்காக குறுங் வீடியோ போட்டி நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பெண்களுக்கு ஏற்புடைய தொழில் சட்டங்கள் குறித்து பல்கலைக்கழக மாணவர்களுக்கான திறந்த விவாத அரங்கமும் நடத்தப்பட்டது. அதற்காக சிரம வாசனா நிதியத்தின் பங்களிப்பும் கிடைத்தது.

- **உலக குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினம் - 2024**





2025 ஆண்டுக்குள் இலங்கையில் இருந்து குழந்தைத் தொழிலாளர்களை இல்லாதொழிக்கும் திட்டத்தின் கீழ், ஜூன் 12 ஆம் திகதி கொண்டாடப்படும் ‘‘உலக குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தின’’ த்திற்கு ஒருங்கமைவாக தொழில் திணைக்களம் ஏற்பாடு செய்த நிகழ்ச்சி, 2024.06.18 ஆம் திகதி தொழில் செயலகத்தின் 10வது மாடியிலுள்ள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதன்போது, தொழில் திணைக்களம் மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை இடையே, குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு பணியை ஊக்குவிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டதோடு கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழ் செயல்படும் கைத்தொழில் பூங்காக்களில் அமைந்துள்ள, 61 நிறுவனங்களின் தொழில்தருநர்கள், தமது நிறுவனங்கள் குழந்தை தொழிலாளர்கள் இல்லாமல் நடத்தப்படும் என உறுதிமொழியும் அளித்தனர். மேலும், தொழில் திணைக்களத்தின் புதிய வலைத்தளம் மூலம் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பது குறித்து முறைசார் துறை நிறுவனங்களிடம் உறுதிமொழி பெற QR குறியீடும் இந்த நிகழ்ச்சியின்போது அறிமுகம் செய்யப்பட்டது.

- **உலக சிறுவர் தினக் கொண்டாட்ட நிகழ்ச்சித்திட்டம் - 2024**

சிறுவர் தொழிலில் இருந்து சிறுவர்களை விடுவிப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களது கவனத்திற்குக் கொண்டு வரும் நோக்குடன் தொழில் திணைக்களம் வருடாந்தம் ஒரு கொண்டாட்ட நிகழ்வை நடத்துகிறது. 2024 ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சி 2024.10.01 ஆம் திகதி தெஹிவளை, மேமா/பிலி/சுபோத மாதிரி கனிஷ்ட வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. “சிறுவர் தொழிலை மறுதலிப்போம்” என்ற கருப்பொருளின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் நடத்தப்பட்ட சுவரொட்டி வடிவமைப்புப் போட்டியின் வெற்றியாளர்களுக்குப் பரிசுகளும் சான்றிதழ்களும் அங்கு வழங்கப்பட்டன. அத்துடன், சிறுவர் தொழில் தொடர்பான சட்ட நிலைமை மற்றும் சிறுவர்களை சிறுவர் தொழிலில் இருந்து விடுவிப்பதற்கான குடிமகனின் பொறுப்பு குறித்து பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சியொன்றும் நடத்தப்பட்டது.

- **தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய வாரம்**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய வாரத்திற்காக தொழில் சார்ந்த சுகாதாரம் மற்றும் சுகாதாரம் குறித்து மூன்று பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டன.

| பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்ட திகதி | பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்ட இடம் | பங்கேற்ற ஊழியர்களின் / தொழில்தருநர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2024.10.23 | கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பானலுவயில் அமைந்துள்ள கைத்தொழில் குடியிருப்பு | 35 |
| 2024.10.29 | ஹொரண அரமனாகொல்லயில் அமைந்துள்ள கைத்தொழில் குடியிருப்பு | 45 |
| 2024.10.25 | வவுனியா பிரதேச செயலகம் (தமிழ் மொழி மூலம்) | 33 |

## 2.13 திணைக்களத்தின் மனித வள முகாமைத்தவம்

2024 ஆம் ஆண்டில், திணைக்களத்தின் ஊழியர்களின் தேவைகளைக் கண்டறிதல், தேவைக்கேற்ப ஆட்சேர்ப்புச் செய்தல், அலுவலர்களுக்கான பதவி உயர்வுகள், வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சைகளை நடத்துதல், செயலாற்றுகை மதிப்பீடு, சம்பள ஏற்றங்களை வழங்குதல், இடமாற்றங்கள், உத்தியோகத்தர்களை ஓய்வுபெறச் செய்தல், உத்தியோகத்தர்களின் விடுப்பு நடவடிக்கைகள் மற்றும் ஊழியர்களின் ஒழுக்காற்று

நடவடிக்கைகள் போன்ற நாளாந்த பதவியணி நிர்வாக நடவடிக்கைகள் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

2024.12.31 நிலவரப்படி, தொழில் திணைக்களத்தின் பதவியணி பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | 2024.12.31 இல் சேவையிலிருந்த எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஸ்ட நிலை | 217 | 126 | 91 |
| மூன்றாம் நிலை | 668 | 504 | 164 |
| இரண்டாம் நிலை | 1928 | 1671 | 257 |
| ஆரம்ப நிலை | 476 | 410 | 66 |
| **மொத்தம்** | **3289** | **2711** | **578** |

2024.01.01 முதல் 2024.12.31 வரை அலுவலர் ஆட்சேர்ப்பு பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| பதவி | நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கை | பரீட்சை நடத்த உத்திதேசிக்கப்பட்ட திகதி | பரீட்சை நடத்தப்பட்ட திகதி | அதன்படி, அலுவலர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட | |
|---|---|---|---|---|---|
| | | | | திகதி | அலுவலர்களின் எண்ணிக்கை |
| தொழில் அலுவலர் தரம் II | 59 | 2022மார்ச் | 2023.04.29 | 2024.05.07 | 57 |

புதிதாக பணியமர்த்தப்பட்ட 57 தொழில் அலுவலர்களுக்காக 2024.05.08 முதல் 2024.09.06 வரை சேவை ஆரம்பப் பயிற்சி அளித்த பின்னர் 2024.09.09 ஆம் திகதி திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்கள் மற்றும் பிரிவுகளுக்கு நியமிக்கப்பட்டனர்.

2024.01.01 முதல் 2024.12.31 வரை வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைகள் நடத்தப்படுதல் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| பதவி | வினைத்திறன் காண் பரீட்சையின் பெயர் | பரீட்சையில் கலந்துகொள்ள தகைமைபெற்ற அலுவலர்களின் எண்ணிக்கை | பரீட்சை நடத்தப்பட்ட திகதி | பரீட்சையில் தோற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| உதவித் தொழில் ஆணையாளர் (திணைக்களம்சார்) | முதலாவது வினைத்திறன் காண் பரீட்சை | 11 | 2024.12.16, 2024.12.17 மற்றும் 2024.12.18 | 09 |

| | | | | |
|---|---|---|---|---|
| தொழில் அலுவலர் - II தரம் | முதலாவது வினைத்திறன் காண் பரீட்சை | 06 | 2024.09.30 மற்றும் 2024.10.01 | 02 |
| மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் - II தரம் | இரண்டாவது வினைத்திறன் காண் பரீட்சை | 01 | 2024.08.26 | - |
| மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் - II தரம் | இரண்டாவது வினைத்திறன் காண் பரீட்சை | 01 | 2024.11.25 | 01 |
| அலுவலக பணியாளர் சேவை - III,II மற்றும் I தரங்கள் | முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது வினைத்திறன் காண் பரீட்சைகள் | 44 | 2024.12.18 மற்றும் 2024.12.19 | 42 |
| ஒருங்கிணைந்த ஓட்டுநர் சேவை - II தரம் | இரண்டாவது வினைத்திறன் காண் பரீட்சை | 03 | 2024.01.17 | 03 |
| தச்சர் - II தரம் | இரண்டாவது வினைத்திறன் காண் பரீட்சை | 01 | 2024.07.18 | 01 |

2024.01.01முதல் 2024.12.31வரை நேர்முகப் பரீட்சை மூலம் அலுவலர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுதல்

| பதவி | நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கை | அதன்படி, அலுவலர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட | |
|---|---|---|---|
| | | திகதி | அலுவலர்களின் எண்ணிக்கை |
| அலுவலக பணியாளர் சேவை - தரம் III | 35 | 2024.08.02 | 09 |

அத்துடன், திணைக்களம் முழு ஊழியர்களினதும் பயிற்சித் தேவைகளைக் கண்டறிந்து உள்ளக பயிற்சி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடாத்துதல், அலுவலர்களை வெளி நிறுவனங்களால் நடத்தப்படும் பயிற்சிப் பாடநெறிகளுக்கு அனுப்புதல், சேவையின் தேவைக்கேற்ப பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்புக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை

அலுவலர்களுக்கு வழங்குதல் மற்றும் வெளிநாட்டு பயிற்சிக்குத் தேவையான ஒருங்கிணைப்பு என்பவற்றை மேற்கொண்டுள்ளது.

உள்நாட்டுப் பயிற்சித் திட்டங்களுக்கு 2024 ஆம் ஆண்டிற்காக ரூ.10,400,000.00 ஒதுக்கப்பட்டிருந்தது. இதில் 2024.12.31 ஆம் திகதி செலவு ரூ.8,546,920.00 என்பதோடு ஒதுக்கீட்டின் சதவீதமாக செலவு 82% ஆகும். இது தொடர்பான விரிவான தகவல்கள் அத்தியாயம் 06 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

பிராந்திய தொழில் அலுவலகங்களில் பணியாளர்களுக்கான செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமை (Performance Evaluation System) மற்றும் நிதி அல்லாத சேவை மதிப்பீட்டு முறையியல் (Non Financial Rewarding System) என்பவற்றைத் தயாரிப்பதற்காக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் (SLIDA) தொழில்நுட்ப உதவியைப் பெறுவதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டதோடு அதனால் முன்வைக்கப்பட்ட திட்டத்தின் படி 2025 ஆம் ஆண்டில் மேலதிக பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், Code of Ethics for officers for service delivery of the Department of Labour ஐ தயாரிப்பதற்காக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக்கொள்வதற்காக கோரிக்கை விடுக்கப்பட்டதோடு அதன் அடுத்தகட்ட நடவடிக்கைகளை 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

தொழில் திணைக்களத்தின் பிரிவுகளுக்கான பயிற்சி மொடியுள்களை (Training Modules) வரைவு செய்யும் பணிகள் 2024 இல் தொடங்கப்பட்டன. ஒரு குழுவினால் வரைவு செய்யப்பட்ட பயிற்சி மொடியுள்களை 2025 ஆம் ஆண்டில் பொருத்தமானவாறு தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.14. திணைக்களத்தின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி

நாடளாவிய ரீதியில் பரந்து காணப்படும் சேவை பெறுநர்களுக்கு மிகவும் பயனுள்ள சேவையை வழங்கும் நோக்கத்தை முதலாகக் கொண்டு, திணைக்களமானது திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள பிராந்திய அலுவலகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தது.

அதன்படி, பிராந்திய அலுவலகங்களின் தேவைக்கேற்ப சிறு பழுதுபார்ப்புகள் மேற்கொள்ளப்பட்டதோடு மெஹெவர பியச கட்டிடத்திலும் தொழில் செயலக கட்டிடத்திலும் உள் கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதன்படி, 2024.12.31 நிலவரப்படி, மெஹெவர பியசு கட்டிடத்தின் 16வது தளத்தின் உள்கட்டமைப்புக்கான கொள்முதல் பணிகளும், தொழில் செயலக கட்டிடத்தின் 3,4 மற்றும் 5வது தளங்களில் உள் கட்டமைப்பு பணிகளும் நடைபெற்று வந்தன.

மேலும், சேவைபெறுநர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி தொடர்பான சேவைகளை ஒரே இடத்தில் வழங்குவதற்காக தொழில் செயலக கட்டிடத்தின் முதலாம் தளத்தில் 2024.08.06 ஆம் திகதி புதிய அலுவலக வளாகம் திறக்கப்பட்டது.

## 2.15 திணைக்களத்தின் செயற்பாடுகளை கண்காணிப்பதன் மூலம் இலக்குகளை நோக்கி வழிநடத்துதல்

2024 ஆம் ஆண்டிற்கான திணைக்களத்தின் வருடாந்த செயற்திட்டத்தின் கீழ் திணைக்களத்தின் இலக்குகளை அடைந்துகொள்வதற்காக திணைக்களத்தின் பிரிவுகள் செயற்படும் விதம் மற்றும் முன்னேற்றம் ஆகியவை சோதிக்கப்பட்டன. அதன்படி, தொழில் ஆணையாளர் நாயகத்தின் தலைமையில் நடைபெற்ற மூத்த பதவிநிலை அலுவலர்களின் கூட்டத்தின் மூலம், ஒவ்வொரு துறையின் முன்னேற்றம் மற்றும் துறைகளில் பணிகளை மேற்கொள்வதில் ஏற்பட்டுள்ள நிர்வாக சிக்கல்கள் குறித்து ஆலோசனைகள் மற்றும் தீர்வுகள் வழங்கப்பட்டன.

வலயங்களுக்குப் பொறுப்பான பிரதித் தொழில் ஆணையாளர்கள், தமது வலயங்களுக்கான மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களின் 2024ஆம் ஆண்டின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகள் தொடர்பான முன்னேற்றங்களை மதிப்பாய்வு செய்ய முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடத்த தேவையான ஏற்பாடுகளைச் செய்தனர்.

வலய பிரதித் தொழில் ஆணையாளர்கள் மூலம் மாவட்ட தொழில் அலுவலகங்கள் மற்றும் உப தொழில் அலுவலகங்களின் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்வதன் பொருட்டு முறையியலொன்றைத் தயாரிப்பதற்காக திணைக்கள அலுவலர்கள் அடங்கிய குழுவை உருவாக்கி, பரிந்துரைகள் பெறப்பட்டன. அதன்படி, வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கு அமைவாக முன்னேற்றத்தைக் மேற்பார்வை செய்யும் பணிகள் 2025 ஆம் ஆண்டில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், தலைமை அலுவலகம், பிராந்திய அலுவலகங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக முறையான முறையியலொன்றைத் தயாரிப்பதற்காகவும் திணைக்கள அதிகாரிகளைக் கொண்ட குழுவை அமைத்ததோடு 2024 ஆம் ஆண்டின் இறுதியாகும்போது குழு கலந்துரையாடல்களை நடத்தி வந்ததோடு குழுவின் பரிந்துரைகளின்படி, 2025 ஆம் ஆண்டில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.16 நிதி முகாமைத்துவம்

2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டை அரச கொள்கைகளுக்கு இணங்க வினைத்திறன்மிக்கதாகவும் பயனுள்ள வகையிலும் சம்பந்தப்பட்ட நோக்கங்களை அடைவதன் பொருட்டு பயன்படுத்துவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்தது.

அதன்படி, 2024.12.31 ஆம் திகதியில், ஒதுக்கப்பட்ட மீண்டெழும் செலவினங்களுக்கான ஒதுக்கீட்டில் 95.2% சதவீதமும், மூலதனச் செலவினங்களுக்கான ஒதுக்கீடுகளில் 22.5% சதவீதமும் இதற்காக பயன்படுத்தப்பட்டு நிதி முகாமைத்துவ இலக்குகள் அடையப்பட்டுள்ளன.

| | **2024 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு (ரூ.)** | **2024.12.31 இல் செலவு (ரூ.)** | **ஒதுக்கீட்டின் சதவீதமாக உண்மையான செலவு** |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவுகள் | 3,018,000,000 | 2,873,402,559 | 95.2 % |
| மூலதனச் செலவுகள் | 1,403,925,000 | 316,159,332 | 22.5 % |

மூலதனச் செலவினங்களின் கீழ் கட்டிடத் திருத்தப் பணிகளுக்காக ஐம்பது செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், தொழில் திணைக்களத்தில் காணப்படும் தொழில்நுட்பப் பணிகளுக்குத் தேவையான பொறியியல் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக, இந்தப் பணிகள் வெளி நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. அந்த நிறுவனங்கள் அளவுப் பத்திரங்களையும் விலைமனு கோரும் ஆவணங்களையும் தயாரித்து வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, கட்டிடத் திருத்தப் பணிகளில் குறிப்பிடத்தக்க தாமதம் ஏற்பட்டது. இதனால், 2024 ஆம் ஆண்டில் மூலதனச் செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடுகளைச் செலவிடுவதில் முன்னேற்றம் குறைவாக இருந்தது.

இப்பிரச்சினைக்குத் தீர்வாக, 2025ல், நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் செயல்முறையைப் பின்பற்றி, தகுந்த ஆலோசனை நிறுவனத்தை தேர்வு செய்து, இப்பணிகளை வினைத்திறன்மிக்க வகையில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**எச்.கே.கே.ஏ. ஜயசுந்தர**
**தொழில் ஆணையாளர் நாயகம்**

# மூன்றாம் அத்தியாயம்

## 2024 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான

## ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை

## 3.1 அத்தியாயம் 2024ம் டிசம்பர் 31ம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான முழு நிதிசெயல் திறன் அறிக்கை

ஏசீஏ- எப்

**2024 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

(ரூபா)

| திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2024 | | குறிப்பு | உண்மை நிலை 2024 | உண்மை நிலை 2023 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ-1 |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | ஏசீஏ-1 |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 1,702,735,000 | 1,405,846,000 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 4,164,557,714 | 3,876,444,205 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 131,681,603 | 122,739,450 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **5,998,974,317** | **5,405,029,654** | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **5,998,974,317** | **5,405,029,654** | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | | 83,240,565 | |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)** | | **5,998,974,317** | **5,321,789,089** | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | - | | |
| 1,985,600,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 1,967,273,776 | 1,708,472,497 | ஏசீஏ-2(ii) |
| 1,012,500,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 892,596,065 | 813,472,042 | ஏசீஏ-2(ii) |
| 19,401,860 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 13,034,578 | 13,863,206 | ஏசீஏ-2(ii) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | ஏசீஏ-2(ii) |
| 498,140 | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | 498,139 | - | ஏசீஏ-2(ii) |
| **3,018,000,000** | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | **2,873,402,559** | **2,535,807,745** | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| 1,032,900,000 | முலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 257,261,044 | 86,065,584 | ஏசீஏ-2(ii) |
| 359,625,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 50,063,883 | 33,270,520 | ஏசீஏ-2(ii) |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | | - | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | ஏசீஏ-2(ii) |
| 10,400,000 | திறன் விருத்தி | 14 | 8,546,920 | 4,062,418 | ஏசீஏ-2(ii) |
| 1,000,000 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | 287,485 | 346,275 | ஏசீஏ-2(ii) |
| **1,403,925,000** | **மொத்த மூலதனம் செலவினம் (எ)** | | **316,159,332** | **123,744,798** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | **4,280,930,828** | 3,681,525,657 | ஏசீஏ-4 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | **125,267,485** | 139,905,842 | ஏசீஏ-5 |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்** | | - | - | |
| | **மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | **4,406,198,313** | **3,821,431,499** | |
| | **மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)** | | **7,595,760,204** | **6,480,984,041** | |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)** | | **(1,596,785,887)** | **(1,159,194,953)** | |
| | **பணிமுற்பண சரிப்படுத்தல்** அறிக்கையின்படி **மீதி** | | (1,609,554,880) | (1,159,194,953) | ஏசீஏ-7 |
| - | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | 12,768,993 | - | ஏசீஏ-3 |
| | | | (1,596,785,887) | (1,159,194,953) | |

## 3.2 நிதிநிலை அறிக்கை

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ஏசீஏ -பீ |
| **2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று** | | | | |
| | | **உண்மை நிலை** | | |
| | **குறிப்பு** | **2024 ரூபா** | **2023 ரூபா** | |
| **<u>நிதி சொத்துக்கள் அற்றது</u>** | | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 17,989,260,234 | 17,824,004,744 | |
| **<u>நிதி சொத்துக்கள்</u>** | | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 267,692,902 | 274,107,020 | |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | 12,768,993 | - | |
| **மொத்த சொத்துக்கள்** | | **18,269,722,130** | **18,098,111,763** | |
| **<u>தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு</u>** | | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | (578,590,517) | (688,549,513) | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 17,989,260,234 | 17,824,004,744 | |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | | |
| **<u>நடைமுறைப் பொறுப்புக்கள்</u>** | | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 846,283,419 | 962,656,533 | |
| *தீர்க்கப்படாத* பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | 12,768,993 | - | |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **18,269,722,130** | **18,098,111,763** | |

# 2024 டிசம்பர் 31ல் உள்ளவாறான
# நிதி நிலைமைக் கூற்று

பக்க இலக்கம் 11 முதல் 52. வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்.'.பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 53 முதல் 66 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். 2024 ஆம் ஆண்டின் 16.12.2024 திகதியிடப்பட்ட இல 06 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான கணக்காளர் |
|---|---|---|
| பெயர் : S.M. Piyatissa | பெயர் : H.K.K.A. Jayasundara | பெயர் : |
| பதவி : Secretary, Ministry of Labour, 7th Floor, "Mehewara Piyesa" Narahenpita, Colombo 05. | பதவி : Commissioner General of Labour, Department of Labour, Colombo 05. | திகதி : 2025.02. 28 |
| திகதி : 2025.02. 28 | திகதி : 2025.02. 28 | T. V. Priyantha, Chief Accountant, Department of Labour, Colombo 05 |

4

## 3.3 காசுப்பாய்ச்சல் அறிக்கை

*ஏசீஏ- சீ*

**2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான**
**காசுப் பாய்ச்சல் கூற்று**

| | உண்மை 2024 ரூபா | 2023 ரூபா |
|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 1,612,476,844 | 1,153,377,936 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 1,702,735,000 | 1,405,846,000 |
| முற்பணங்களை அறவிடல் | 143,085,055 | 132,455,074 |
| வைப்புக்களின் பெறுகை | 4,164,557,714 | 3,876,444,205 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **7,622,854,613** | **6,568,123,215** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | 2,845,654,575 | 2,509,086,774 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 13,532,717 | 13,863,206 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 36,886,503 | 29,565,347 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | - | 83,240,565 |
| முற்பணக் கொடுப்பனவு | 125,815,190 | 139,559,050 |
| வைப்புக் கொடுப்பனவு | 4,280,930,828 | 3,681,525,657 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **7,302,819,814** | **6,456,840,600** |
| **தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **320,034,799** | **111,282,615** |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | |
| பங்கு இலாபம் | - | |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | |
| | - | |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | **-** | |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 307,265,806 | 111,282,615 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **307,265,806** | **111,282,615** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(307,265,806)** | **(111,282,615)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)** | **12,768,993** | **-** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | **-** | **-** |
| ***கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:*** | | |
| உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | **-** | **-** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | **-** | **-** |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)** | **12,768,993** | - |
| **ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | - | - |
| **டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | **12,768,993** | - |

## 3.4 நிதிநிலை அறிக்கை களுக்கான குறிப்புகள்

**அறிக்கையிடலின் அடிப்படை**

1) **தயார்படுத்தலின் நோக்கம்**
2024 ஆம் ஆண்டின் 16.12.2024 திகதியிடப்பட்ட இல 06 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2) **அறிக்கையிடல் காலப்பகுதி**
இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2024 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

3) **அளவீட்டுக்கான அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.
நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

4) **வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

5) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.
கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

6) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**
இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

7) **காசு மற்றும் காசுக்கு சமமானவை**
காசு மற்றும் காசுக்கு சமமானவை 2024 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

* ஒரு குறிப்பிட்ட அறிக்கையிடல் நிறுவனத்திற்கு குறிப்பிட்ட பரிவர்த்தனைகள் இருக்கும் சந்தர்ப்பங்களில் பொருத்தமான தகவல்களை உள்ளடக்கலாம் மற்றும் மாதிரிப்படிவங்களில் தேவைக்கேற்ப திருத்தங்களைச் செய்யலாம். அந்த குறிப்பிட்ட பரிவர்த்தனைகளுக்கு தேவையான வெளிப்படுத்தல் "அறிக்கையிடலின் அடிப்படை" என்பதற்குக் கீழ் சேர்க்கப்படலாம்.

* அறிக்கையிடல் நிறுவனத்திற்கு தொடர்புடைய கணக்கியல் கொள்கைகள் மட்டுமே "அறிக்கையிடலின் அடிப்படை" இன் கீழ் ' வெளிப்படுத் தப்படவேண்டும்.

## 3.5 வருவாய் வசூல் செய்யும் செயற்றிறன்

| வருமான குறியீடு | வருவாய் குறியீட்டின் விபரம் | வருவாய் மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை(ரூ) | இறுதி வருவாய் மதிப்பீடு % |
| பொருந்தாது | | | | | |

## 3.6 ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டின் பயன்பாட்டு செயற்றிறன்

| ஒதுக்கீட்டின் வகை | ஒதுக்கப்பட்டஒதுக்கீடு | உண்மையானசெலவு | பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுமுடிக்கப்பட்ட இறுதி ஒதுக்கீட்டின் தொகை% |
|---|---|---|---|
| மீண்டுவரும் | 3,018,000,000 | 2,873,402,559 | 95.2 % |
| மூலதனம் | 1,403,925,000 | 316,159,332 | 22.5 % |

## 3.7 நி.பி 208 விதிமுறைகள், பிறஅமைச்சுகள் /திணைக்களங்களின் பிரதிநிதிகள்

| தொடர். இல. | அமைச்சு / திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொண்ட ஒதுக்கீடு | ஒதுக்கீட்டுக்கான நோக்கம் | ஒதுக்கீடு | | உண்மையான செலவு | பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீட்டில் முடிக்கப்பட்ட இறுதி ஒதுக்கீட்டுத் தொகை % |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்பம் | இறுதி | | |
| 01. | விவசாயம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு | அபிவிருத்தி அலுவலர் சேவையில் தொழிலைப் பெற்றுக் சேவை புரிந்த அலுவலர் ஒருவரினை நிர்வாக சேவைக்கு விடுவிக்கும் பொழுது அவருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட சம்பளத்தினை மீள அறவிடல். | - | - | (19,220.97) | - |
| 02. | விவசாயம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு | | - | - | (13,874.19) | - |
| 03. | அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்;ராட்சி அமைச்சு | பட்டதாரி பயிற்சி உத்தியோகத்தர்களின் கொடுப்பனவுகளைச் செலுத்துதல். | 1,091,250.00 | 1,091,250.00 | 654,750.00 | 60% |
| 04. | அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்;ராட்சி அமைச்சு | பட்டதாரி பயிற்சி உத்தியோகத்தர்களின் கொடுப்பனவுகளைச் செலுத்துதல். | 1,543,500.00 | 1,543,500.00 | 1,088,100.00 | 70% |
| 05. | தொழில் அமைச்சு - வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவு | அமைச்சின்நீர் மற்றும் மின்சாரத்திற்கான செலவுகள் | 5,377,281.43 | 5,377,281.43 | 5,377,281.43 | 100% |
| 06. | தொழில் அமைச்சு - வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவு | அமைச்சின் வாடகைக்கான செலவு | 1,295,910.00 | 1,295,910.00 | 1,295,910.00 | 100% |
| 07. | தொழில் அமைச்சு - வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவு | மெஹெவர பியெச வசதிகளுக்கான முகாமைத்துவ கட்டணம் | 3,362,951.17 | 3,362,951.17 | 3,362,951.17 | 100% |
| 08. | தொழில் அமைச்சு | அமைச்சின்நீர் மற்றும் மின்சாரத்திற்கான செலவுகள் | 9,456,035 | 9,456,035 | 9,456,035 | 100% |
| 09. | தொழில் அமைச்சு | அமைச்சின் வாடகைக்கான செலவு | 1,555,092 | 1,555,092 | 1,555,092 | 100% |
| 10. | தொழில் அமைச்சு | அமைச்சகத்தை துப்பரவு செய்யும் செலவினை ஏற்றுக் கொள்ளுதல் | 325,541.10 | 325,541.10 | 325,541.10 | 100% |
| 11 | தொழில் அமைச்சு | மெஹெவர பியெச வசதிகளுக்கான முகாமைத்துவ கட்டணம் | 3,710,000.28 | 3,710,000.28 | 3,710,000.28 | 100% |
| 12 | தொழில் அமைச்சு | கண்ணியமான பணி திட்டத்திற்கான செலவு. | 8,488,000.00 | 8,488,000.00 | 6,182,352.22 | 73% |

## 3.8 நிதி அல்லாத சொத்துகள் அறிக்கைசெய்யும் செயற்றிறன்

| சொத்துகுறியீடு | குறியீடுவிபரம் | 31.12.2024 திகதியிட்டபொருட்கள் கணக்கெடுப்புஅறிக்கையின்படி இருப்பு | 31.12.2024 நிதிதரஅறிக்கையின் படி இருப்பு | எதிர்காலத்தில் கணக்கிடப்படவேண்டியது | முன்னேற்றத்தை % எனகுறித்தல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடகட்டமைப்புகள் | 2,865,777,749.65 | 2,865,777,749.65 | | 100% |
| 9152 | இயந்திரங்கள் | 808,158,488.35 | 808,158,488.35 | | 100% |
| 9153 | காணிகள் | 2,262,720,000.00 | 2,262,720,000.00 | | 100% |
| 9154 | புலனாகதசொத்துகள் | 52,351,728.54 | 52,351,728.54 | | 100% |
| 9155 | உயிரியல் பண்புகள் | - | - | | |
| 9160 | செய்துகொண்டுக்கும் வேலை | 12,000,252,267.79 | 12,000,252,267.79 | | 100% |
| 9180 | குத்தகைக்கு விடப்பட்டசொத்துக்கள் | - | - | | |

## 3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

2025 யூலை 08

எனது இலக்கம் : எல்எஸ்டப்ளியூ/பீ/டீஓஎல்/எஸ்ஆர்/01/2024

கணக்கீட்டு அலுவலர்
தொழில் திணைக்களம்

**தலைப்பு – 221, தொழில் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சுருக்க அறிக்கை**

---

1. **நிதிக்கூற்றுக்கள்**

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு – 221, தொழில் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தொழில் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு அலுவலரிடம் வருடாந்த விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூலை 07 ஆம் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வு அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, தொழில் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான தொழில் திணைக்களத்தின் நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழி செய்யப்படும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 விடயமொன்றை வலியுறுத்துதல் - நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதன் அடிப்படை

இந்த நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதன் அடிப்படையை விவரிக்கும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இன் மீது கவனத்தைச் செலுத்துகிறேன். நிதிக் கூற்றுக்கள் அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் 150 மற்றும் 151 மற்றும் 2025 பிப்ரவரி 21-ஆம் தேதி திருத்தப்பட்ட 2024 டிசம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்கு வழிகாட்டல் இலக்கம் 06/2024 இன் படி தொழில் திணைக்களம், பொதுத் திறைசேரி மற்றும் பாராளுமன்றத்தின் தேவைக்காக தயாரிக்கப்பட்டுள்ளன. எனவே, இந்த நிதிக் கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக அமையலாம். எனது அறிக்கையானது தொழில் திணைக்களம், பொதுத் திறைசேரி மற்றும் இலங்கைப் பாராளுமன்றம் ஆகியவற்றின் பயன்பாட்டினை மட்டும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்விடம் தொடர்பில் எனது அபிப்பிராயமானது மாற்றியமைக்கப்பட மாட்டாது.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு அலுவலரினதும் கணக்கீட்டு அலுவலரினதும் பொறுப்பு

அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் 150 மற்றும் 151 மற்றும் 2025 பிப்ரவரி 21-ஆம் தேதி திருத்தப்பட்ட 2024 டிசம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்கு வழிகாட்டல் இலக்கம் 06/2024 இற்கு அமைவாக அனைத்து புள்ளிவிபரங்களிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடியவாறு அதன் வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாகப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்வதாக கணக்கீட்டு அலுவலர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த முறைமையின் செயற்திறன் தொடர்பில் காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்து, அதற்கமைய முறைமையினை பயனுள்ளதாக நடாத்திச் செல்வதற்குத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களுக்கான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொடுப்பதும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக உள்ள போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளதென்பதற்கான உறுதிப்படுத்தலல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக் கூடியதாக இருப்பதுடன் அதன் அளவுசார்தன்மையானது, இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் மீது தங்கியிருக்கும்.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றைப் பெற்றுக்கொள்ளும்போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் ஆபத்தினை இனங்காண்பதற்காகவும் மதிப்பிடுவதற்காகவும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படாதபோதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாடு தொடர்பான புரிதல் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமை மதிப்பாய்வு செய்யப்பட்டது.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியிருப்பதும் வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய நிதிக் கூற்றுககளின் ஒட்டுமொத்த சமர்ப்பணமும் மதிப்பிடப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1. வருமானம்

தொழில் திணைக்களத்தினால் 2024 ஆம் ஆண்டு ஊழியர் சேமலாப நிதியத்தின் நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட பணம் மாதாந்தம் இலங்கை மத்திய வங்கியின் ஊடாக மீளளிப்பு செய்து கொள்ளப்பட்டுள்ளதுடன் 2024 ஆம் ஆண்டில் அவ்வாறு மீளளிப்பு செய்து கொள்ளப்பட்ட 967,027,707 ரூபா தொகை வருமான தலைப்பொன்றில் வரவு வைக்கப்பட்டதன் காரணமாக திணைக்களத்தின் நிதிக் கூற்றுகளில் வருமானமாக தவறான ஒரு தொகை குறிப்பிடப்பட்டிருந்தது.

#### 1.6.2 மூலதனச் செலவினம்

(அ) 2024 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 3,777,444 ரூபா பெறுமதியான கணினி மென்பொருள்கள் திணைக்களத்தின் சொத்துக்களாக பதிவு செய்யப்பட்டிருந்ததோடு 2024 ஆம் ஆண்டில் ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களாகவும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ஊழியர் சேமலாப நிதியத்தின் பணிகளுக்காக நிதி ஏற்பாடுகளின் ஊடாக செய்யப்பட்ட செலவினம் இலங்கை மத்திய வங்கியின் மூலம் மீளளிப்பு செய்துகொள்ளப்படுதல் மற்றும் அவ்வாறு மீளளிப்பு செய்துகொள்ளப்பட்ட தொகை தொழில் திணைக்களத்தின் தொடர்புடைய செலவுத் தலைப்புகளில் மேலதிகமாக சேர்க்கப்பட வேண்டும் என்ற போதிலும் அந்த முறையியல் பின்பற்றப்படாததன் காரணமாக 2024 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள 967,027,707 ரூபா செலவினம் ஊழியர் சேமலாப நித்தியத்தின் செலவுகளாகவும் மீண்டும் பதியப்பட்டிருந்தது.

### 2. ஏனைய சட்டத் தேவைகள் பற்றிய அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த நிதிக் கூற்றுகளில் ACA 6 மாதிரி படிவத்தில் உள்ளடங்கியுள்ள 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகளின் இறுதி நிலுவைகளுக்கு இடையிலான வித்தியாசங்கள் இந்த அறிக்கையில் 1.5.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்த கணக்காய்வு அவதானிப்பின் படி கடந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களுடன் இயைந்தொழுகவில்லை.

(ஆ) கடந்த ஆண்டுக்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

### 3. நிதிசார் மீளாய்வு

#### 3.1 செலவின முகாமைத்துவம்

(அ) 3 செலவுத் தலைப்புகளுக்கு உரியதாக வழங்கப்பட்டிருந்த 192,500,000 ரூபா நிதி ஏற்பாடுகளில் மீளாய்வு ஆண்டில் எத்தகைய செலவினமும்

மேற்கொள்ளப்படாதமை மற்றும் நூற்றுக்கு நூறு விதமான நிதி ஏற்பாடுகள் எஞ்சியிருத்தல் அவதானிக்கப்பட்டன.

(ஆ) 14 செலவுத் தலைப்புகளுக்கு உரியதாக வழங்கப்பட்டிருந்த 1,157,501,540 ரூபா நிதி ஒதுக்கீட்டில் மீளாய்வு ஆண்டின் இறுதியில் 258,900,994 ரூபா மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த மீதியின் வீதமானது நூற்றுக்கு 44 முதல் நூற்றுக்கு 96 வரையான வீச்சில் காணப்பட்டது.

3.2 <u>சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமானங்களுக்கு அமைந்தொழுகாமை</u>

| சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமானங்களுக்கான தொடர்ப்பு | அமைந்தொழுகாமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXXIV ஆம் அத்தியாயம் | |
| 4.5 மற்றும் 4.6 பிரிவுகள் | (i) தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிட முடியாதுள்ள மீளாய்வு ஆண்டின் இறுதியில் சேவையை விட்டுச்சென்ற, பணித் தடை செய்யப்பட்ட மற்றும் சேவையிலிருந்து நீக்கப்பட்ட அலுவலர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவை 1,914,316 ரூபா என்பதோடு அதில் 384,060 ரூபா நிலுவைகள் 6, பத்து (10) வருடங்களைக் கடந்தவையாகும்.<br>(ii) மரணித்த 4 அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவை 287,752 ரூபா என்பதோடு அவற்றுக்கு மத்தியில் 1-3 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட 153,792 ரூபாவும் 3-5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட 10,000 ரூபாவும், 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 123,960 ரூபா நிலுவையும் காணப்பட்டது. |
| (ஆ) 2016 டிசம்பர் 16 ஆம் தேதிய 30/2016 ஆம் இலக்கமுடைய பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | திணைக்களத்துக்குச் சொந்தமாக 87 வாகனங்கள் உள்ள போதிலும் 80 வாகனங்களில் தகன பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை 05/2020 மற்றும் அரச நிதி சுற்றறிக்கை 01/2020 | திணைக்களத்துக்குச் சொந்தமான பொருளாதார ரீதியில் பயனற்ற நிலையில் உள்ள வாகனங்களை இனங்கண்டு அகற்ற வேண்டிய போதிலும் மீளாய்வு ஆண்டில் அந்தப் பணி முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2019 செப்டம்பர் 27 ஆம் திகதிய 2142/90 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி | வர்த்தமான பத்திரிகையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தொழிற்சாலைகளுக்கான புதிய பதிவுச் செயன்முறையை முறையாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வேலைத்திட்டம் தயாரிக்கப்படடிருக்கவில்லை. |

**3.3 வைப்பீடுகள்**

(அ) திணைக்களத்தின் கேள்விப் பத்திர வைப்பீட்டுக் கணக்கில் 2024 டிசம்பர் 31 ஆம் தேதியில் நிலுவை 24,313,744 ரூபாவாக காணப்பட்டதோடு அந்த நிலுவையில்

16,327,781 ரூபா தொகையானது இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட மெஹெவர பியெச கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட வைப்புகள் என்பது வெளியானது.

(ஆ) தொழில் திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் 2024 டிசம்பர் 31 ஆம் தேதியில் நிலுவை 821,969,675 ரூபா காணப்பட்டதோடு அதில் 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் காணப்பட்ட EPF (நட்ட ஈடுகள் மற்றும் பணிக்கொடை) இன் மொத்தம் 7,022,106 ரூபாவை தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2016 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை காணப்பட்ட 349,186,269 ரூபா தொகையில் 2025 ஏப்ரல் மாதம் அளவில் மேற்கொண்டும் தீர்ப்பதற்கு உள்ள நிலுவை 311,596,989 ரூபாவாக காணப்பட்டது.

(இ) 2024 ஆம் ஆண்டுக்குரிய உரிமைக் கோரல் கணக்குகளில் தொடர்புடைய மாவட்ட அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும் 2025 மே மாதம் வரையில் மத்திய கொழும்பு, கொழும்பு மேற்கு மற்றும் கொழும்பு தெற்கு அலுவலகங்களில் முறையே 1,539,544 ரூபா, 222,740 ரூபா மற்றும் 403,600 ரூபா நிலுவைகளாக செலுத்தப்பட வேண்டியிருந்தது.

## 4. தொழிற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 தொலைநோக்கு மற்றும் நோக்குப் பணி

ஒரு கூரையின் கீழ் அனைத்துப் பணிகளையும் நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கத்துடன் 2008 மே மாதம் 12-ஆம் திகதி அமைச்சரவை விஞ்ஞானத்தின் பிரகாரம் அங்கத்தவர்களைப் பதிவு செய்வது முதல் சந்தாப்பணம் செலுத்துவதை தட்டிக் கழிக்கின்ற தொழில் தருநர்களுக்கு எதிராக வழக்கு தொடுத்தல், அங்கத்தவர்களின் அனுகூலங்களை பெற்றுக் கொள்வதை இலகுபடுத்தும் ஊழியர் சேமலாப நிதியச் செயலகம், மத்திய வங்கி அலுவலர்களைக் கொண்டமைந்த நிர்வாக அலகு, வழக்கு விசாரணை நடவடிக்கைகளுக்காக நீதவான் நீதிமன்றம், கலந்துரையாடல் மண்டபம், சிற்றுண்டிச்சாலை என்பவற்றுக்குத் தேவையான இட வசதிகளை ஒதுக்குவது மெஹெவர பியெச கட்டிடத்தை நிர்மாணித்ததன் நோக்கமாக அமைந்த போதிலும் அந்த நோக்கம் நிறைவேறவில்லை. 2024 டிசம்பர் மாதத்தில் தொழில் விடயப் பரப்புக்குள் நேரடியாக உட்படாத உள்நாட்டு இறைவரி திணைக்களம் (24,25 ஆம் மாடிகளை) அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் (26,27 ஆம் மாடிகளை) குத்தகையின்றி பயன்படுத்தி வருவது அவதானிக்கப்பட்டது.

#### 4.1.2 கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டுள்ளமை

கொக்கல மற்றும் கட்டுநாயக்க விடுதிகளில் திருத்தப் பணிகளுக்காக 2023 ஆம் ஆண்டில் 6,000,000 ஒதுக்கீடுகளும் மீளாய்வு ஆண்டில் 2,500,000 ரூபா ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட பணி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.3 கருத்திட்டங்களை நிறைவேற்றுவதன் தாமதங்கள்

(அ) 2023 ஆம் ஆண்டில் மெஹெவர பியெச கட்டடத்தின் 16 ஆம் மாடியின் உள்ளக விபரக் குறிப்பினை தயாரிப்பதற்காக 30,000,000 ரூபா மதிப்பீட்டு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்து கொள்ளப்பட்டுள்ளதோடு மீளாய்வு ஆண்டில் 36,880,000 ரூபா நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. பெறுகைச் செயன்முறை ஆரம்பிக்கப்படுவது 2024 அக்டோபர் மாதம் வரை தாமதம் அடைந்ததன் காரணமாக உரிய கருத்திட்டத்தை 2024 ஆம் ஆண்டிலும் நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை.

(ஆ) மெஹெசர பியெச கட்டிடத்தை 2019 ஆகஸ்ட் 20 ஆம் தேதி திறந்து அலுவலக நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ள போதிலும் கழிவு முகாமைத்துவ செயலாற்றுகை நிகழ்ச்சித்திட்டத்தை 2024 ஆம் ஆண்டு இறுதிவரையில் நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் போயிருந்தது. இதற்காக 2023 ஆம் ஆண்டில் 5,000,000 ரூபா நிதி ஒதுக்கீடும் 2024 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட 13,000,000 ரூபா நிதி ஒதுக்கீடும் எஞ்சியிருந்தது.

#### 4.1.4 நிதி விடுவிக்கப்பட்டுள்ள போதிலும் முன்னேற்றம் அடைந்திராத கருத்திட்டங்கள்

2019 ஆம் ஆண்டில் இரத்தினபுரி மாவட்ட தொழில் அலுவலகத்தில் திருத்தப் பணிகளுக்காக அடிப்படை மதிப்பீடு ஒன்றின் மீது கட்டிட திணைக்களத்திற்கு 11,177,000 ரூபா தொகை செலுத்தப்பட்டிருந்தது. அடிப்படை மதிப்பீட்டில் கூரை மற்றும் உட்கூரை என்பவற்றின் திருத்தப் பணிகளுக்காக 1,922,500 ரூபா செலவு உள்ளடக்கப்பட்டு இருந்ததோடு திருத்தத்தின் தன்மை தொடர்பில் அடிப்படை மதிப்பீட்டில் விவரிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் பயன்படுத்தப்படும் மரங்கள், எஸ்பெஸ்டோஸ் போன்றவை தொடர்பில் தெளிவான குறிப்பீடு இருக்கவில்லை. கணக்காய்வு செய்யப்பட்ட சந்தர்ப்பமாகிய 2024 ஆகஸ்ட் மாதம் அளவில் மழை பெய்த சந்தர்ப்பங்களில் கூரையிலிருந்து உட்கூரை வழியாக நீர் கசிவு இடம்பெற்றதோடு உணவு பெற்றுக்கொள்ளும் இடத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்விசிறி ஊடாக ஏற்பட்ட நீர்க் கசிவின் காரணமாக மின்சார செயலிழப்பு ஏற்பட்டு வந்த போதிலும் அது தொடர்பில் கட்டிடத் திணைக்களத்தை விழிப்பூட்டி தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள முகாமைத்துவம் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

#### 4.1.5 எதிர்பார்க்கப்பட்ட அனுகூலங்கள் பெறப்படாமை

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் ஸ்மார்ட் பணி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட 8,488,000 ரூபா நிதி ஏற்பாட்டில் 6,178,202 ரூபா மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி எஞ்சியதன் மொத்த சதவிகிதம் நூற்றுக்கு 27 என வெளியானது. இவற்றுக்கு மத்தியில் சமூக உரையாடல் மற்றும் வேலைத்தள ஒத்துழைப்பு பிரிவிற்கு வழங்கப்பட்ட நூற்றுக்கு 44 வீதமான நிதி ஏற்பாடும் காணப்பட்டது.

#### 4.1.6 முகாமைத்துவ பலவீனங்கள்

(அ) திணைக்களத்தில் பேணப்பட்டு வருகின்ற கடன் ஆவண மாதிரி சோதனையில் (CC10) முறையாக பேணப்படாமை காரணமாக 09 சந்தர்ப்பங்களில் 09 அலுவலர்களின் கடன் நிலுவைகள் சரியாக பதிவு செய்யப்படாமை மற்றும் போலியாக பதிவு செய்யப்படுதல் இருந்தது அவதானிக்கப்பட்டது.

(ஆ) முன்கூட்டிய ஆய்வு மற்றும் மதிப்பீடு இன்றி பொருட்கள் மற்றும் வேலை பெறுகை நடவடிக்கைகள் 7இற்காக 139,270,000ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் காணிகளில் பிரச்சினை காணப்படுதல், PPP முறை காரணமாக இடை நிறுத்தப்படுதல், டிஜிட்டல் முறையியல் அறிமுகப்படுத்தப்படுதல் போன்ற பிரச்சினைகள் காரணமாக 2024 ஆம் ஆண்டில் அந்தப் பணிகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் போயிருந்தது.

(இ) 7,855,576 ரூபா செலவிட்டு 2023 ஆம் ஆண்டு ஹம்பாந்தோட்டை மாவட்ட தொழில் அலுவலகம் மற்றும் சுற்றுலா பங்களா திருத்தப்பட்டிருந்தாலும் தேவையான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படாததன் காரணமாக பயன்படுத்தப்படாமல் இருந்தது.

(ஈ) நிலவும் வானிலை காரணமாக நிதமும் மின் தடங்கல் ஏற்படும் இரத்தினபுரி மாவட்ட தொழில் அலுவலகத்தின் மின் பிறப்பாக்கி மூலம் ஊழியர் சேமலாப நிதியப் பிரிவுக்கு மட்டும் போதுமான மின் வழங்கல் கிடைப்பதால் நாளாந்த கடமைகளுக்கு தடைகள் ஏற்படும் நிலைமையில் காணப்பட்டது.

(உ) 2017 ஆம் ஆண்டு வெள்ளத்தினால் கடிதக் கோப்புகள் அழிவுற்றதால் ஆவணங்களைத் தேடிக்கொள்ள முடியாததால் 7,254,381 ரூபா அரச வருமானத்தில் வரவு வைப்பதற்கு தயாராக இருந்ததாக அவதானிக்கப்பட்டிருந்ததோடு ஆபாய நேர்வுமிக்க ஒரு இடத்தில் அமைந்துள்ள ஒரு அலுவலக வளாகம் என்பதால் அங்கு ஒரு தகவல் முறைமையை அல்லது வேறு வகையில் தகவல்களை பேணிச் செல்ல (backup) நடவடிக்கை எடுத்திருக்காமை முகாமைத்துவ பலவீனமாக அவதானிக்கப்பட்டது.

## 5. மனிதவள முகாமைத்துவம்

2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் திணைக்களத்தில் காணப்பட்ட சிரேஸ்ட மட்ட ஊழியர் வெற்றிட சதவிகிதம் நூற்றுக்கு 42 என்பதோடு மூன்றாம் நிலை வெற்றிடங்களின் சதவிகிதம் நூற்றுக்கு 25 ஆகும். வெற்றிடங்களின் அளவு உயர் சதவிகிதத்தில் காணப்படுதன் காரணமாக நிறுவன படிநிலையில் தீர்மானம் மேற்கொள்ளல், பொறுப்பினை ஏற்றல், மேற்பார்வை செய்தல் மற்றும் வழிகாட்டல் போன்ற சந்தர்ப்பங்களில் நடைமுறை ரீதியான சிக்கல்கள் ஏற்படலாமெனஅவதானிக்கப்பட்டது.

திணைக்களமானது தொழில்துறை சார்ந்த சுமார் 14 சட்டங்களின் கடமை நடவடிக்கைகள், புலனாய்வு நடவடிக்கைகள், பொது மக்களுடன் தொடர்புடைய நாளாந்தப் பணிகளில் ஈடுபடுவதன் காரணமாக முகாமைத்துவ சேவையில் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காணப்படுவது வினைத்திறனுக்கு தடைகளை ஏற்படுத்தியிருந்தது.

எச்.எம்.டீ.செய்சா
சிரேஸ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பதிலாக

# நான்காம் அத்தியாயம்

# செயலாற்றுகைச் சுட்டிகள்

# செயலாற்றுகைச் சுட்டிகள்

## 4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

| விசேட சுட்டிகள் | எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு | | |
|---|---|---|---|
| | **100% - 90%** | **75% - 89%** | **50% - 74%** |
| • ஊழியர் சேமலாப நிதி நன்மைகளை செலுத்துவதற்கு 14 நாட்களுக்குள் தீர்மானக் கடிதங்களை அனுப்பும் சதவீதம் | | | 71% |
| • 2025 ஆம் ஆண்டில் குழந்தைத் தொழிலாளர் இல்லாத நாடாக இலங்கையை மாற்றும் நிலையான இலக்கைக் முதலாகக் கொண்டு 2024 ஆம் ஆண்டில் நிறைவேற்றுவதற்கு இலக்காக் கொள்ளப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதன் சதவீதம் | 98% | | |
| • நிறுவனங்களில் நிறுவப்பட இலக்காகக் கொள்ளப்பட்ட இருதரப்பு பாதுகாப்பு குழுக்களின் எண்ணிக்கையில் நிறுவப்பட்ட இருதரப்பு பாதுகாப்பு குழுக்களின் எண்ணிக்கையின் சதவீதம் | | 81% | |
| • பெண்களை இரவு நேர சேவையில் ஈடுபடுத்துதல் தொடர்பான நிபந்தனைகளின் மீறல்கள் தொடர்பாக கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை செய்து தீர்த்ததன் சதவீதம் | 100% | | |
| • சமூக உரையாடலை ஊக்குவிக்க நிறுவன அளவிலான நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு இலக்காகக் கொள்ளப்பட்ட சதவீதத்தில் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்ட எண்ணிக்கையின் சதவீதம் | 100% | | |

# ஐந்தாம் அத்தியாயம்

## நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை (SDGs) அடைந்து கொள்வதன் செயலாற்றுகை

# நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதன் செயலாற்றுகை

## 5.1 இனங்காணப்பட்ட உரிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

இலங்கை 2030 ஆம் ஆண்டளவில் அடைய வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களுக்கு மத்தியில் தொழில் திணைக்களத்தின் பணியின் பிரகாரம் திணைக்களத்திற்கு நேரடியாக ஏற்புடையதாக அமைவது 08 வது குறிக்கோளாகும். அதாவது, அனைவருக்கும் நிலையான, முழுமையான மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, முழுமையான ஆக்கவிளைவுடன்கூடிய மற்றும் ஆரோக்கியமான தொழில் வாய்ப்புகளை ஊக்குவித்தல் எனும் குறிக்கோளாகும். அதன்படி தொழில் திணைக்களத்தின் நோக்கு மற்றும் பணி என்பன இந்த குறிக்கோளுடன் இசைவாக்கம் அடைவதோடு திணைக்களத்தின் அனைத்துச் செயற்பாடுகளுக்குமான இறுதி வெளியீடு இந்தக் குறிக்கோளை வெற்றிகரமாக அடைந்து கொள்வதாகும். அவ்வகையில் நோக்கும்போது திணைக்களத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தின் மூலம் 08வது குறிக்கோளை அடைந்து கொள்வதன் முன்னேற்றம் தெளிவாகத் தெரிகின்றது.

இவற்றைத் தவிர 01 ஆம் குறிக்கோளாகிய அனைத்து இடங்களிலும் காணப்படுகின்ற அனைத்து வகையான வறுமையையும் முடிவுக்குக் கொண்டு வருதல், 05வது குறிக்கோளாகிய பால்நிலை சமத்துவத்தை அடைந்து அனைத்துப் பெண்களையும் சிறுமிகளையும் வலுவூட்டுதல் மற்றும் 16 வது குறிக்கோளாகிய நிலைபேறான அபிவிருத்தியின் நிமித்தம் அமைதியானதும் முழுமையானதுமான சமூகங்களை உருவாக்குதல், நீதிக்கான வாய்ப்பினை சகலருக்கும் வழங்குதல் மற்றும் சகல மட்டங்களிலும் பயனுள்ள, பொறுப்புடன்கூடிய முழுமையான நிறுவனங்களை உருவாக்குதல் ஆகிய குறிக்கோள்களும் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு அமைய பொருத்தமானவாறு ஏற்புடையதாக அமையும்.

## 5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதன் வெற்றிகளும் சவால்களும்

| இலக்கு / நோக்கம் | | இலக்குகள் | | வெற்றிச் சுட்டிகள் | | 2024.01.01 முதல் 2024.12.31 வரைவெற்றிபெறுவதன் முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | அனைத்து இடங்களிலும் காணப்படுகின்ற அனைத்து வகையான வறுமையையும் முடிவுக்குக் கொண்டு வருதல் | 1.1 | 2030 ஆம் ஆண்டளவில் உலகின் சகல இடங்களிலும் வாழ்கின்ற மக்களின் தீவிரமான வறுமையை இல்லாதொழித்தல். இன்றைய மதிப்பீட்டின் பிரகாரம் நாளொன்றுக்கு 1.25 டொலரை விடக் குறைந்த வருமானம் பெறும் மக்கள் தீவிரமான வறுமையைக் கொண்டுள்ள குழுவில் உள்ளடங்குவர். | 1.1.1 | பால்நிலை, வயது, தொழில் வாய்ப்பு மட்டம் மற்றும் புவியியல் அமைப்பு (நகர, கிராம) ஆகிய காரணிகளுக்கு ஏற்ப சர்வதேச வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களின் விகிதம் | • தேயிலைச் செய்கை மற்றும் உற்பத்திக் கைத்தொழில் மற்றும் இரப்பர் செய்கை மற்றும் மூல இரப்பர் பதப்படுத்தும் தொழிலில் குறைந்தபட்ச தினசரி ஊதியத்தை இற்றைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| 05 | பால்நிலை சமத்துவத்தை அடைந்து அனைத்துப் பெண்களையும் சிறுமிகளையும் வலுவூட்டுதல் | 5.1 | பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் எதிராக சகல இடங்களிலும் இடம்பெறுகின்ற சகல விதமான பாகுபாடு காட்டப்படுதல்களையும் இல்லாதொழித்தல் | 5.1.1 . | பால் நிலை சமத்துவம் மற்றும் பாகுபாடு காட்டப்படாமையை மேம்படுத்தப்படுவதனை வலுப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்வதற்கான சட்டக் கட்டமைப்பு உள்ளதா இல்லையா என்பது. | • 2024.03.08 ஆம் திகதி கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்திற்கு ஒருங்கமைவாக தொழில் திணைக்களம் ஏற்பாடு செய்த மகளிர் தின நிகழ்ச்சி 2024.03.07 ஆம் திகதி தொழில் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. ”பெண்களுக்கு ஏற்புடைய தொழில் சட்டம்” தொடர்பில் சமூக ஊடகங்கள் மூலம் சமுதாயத்தை விழிப்பூட்டுவதற்காக குறுங் |
| | | 5.2 | மனித வஞ்சக் கடத்தல் பாலியல் மற்றும் ஏனைய வகையிலான துஷ்பிரயோகங்கள் உள்ளடங்களாக பெண்களுக்கும் | 5.2.1 | கடந்த 12 மாத காலப்பகுதியில், துன்புறுத்தலின் தன்மை மற்றும் வயதின் பிரகாரம் வாழ்க்கைத் துணை | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | சிறுமிகளுக்கும் எதிராக பொது மற்றும் தனிப்பட்ட இடங்களில் இடம்பெறுகின்ற அனைத்து வகையான வன்முறைகளையும் இல்லாதொழித்தல் | | இருந்த/இருக்கின்ற, 15 வயதுக்கு மேற்பட்ட பெண் பிள்ளைகளுக்கு மத்தியில் உடல், பாலியல் அல்லது உள ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளான அளவு | வீடியோ போட்டி நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அத்துடன் பெண்களுக்கு ஏற்புடைய தொழில் சட்டங்கள் குறித்து பல்கலைக்கழக மாணவர்களுக்கான திறந்த விவாத அரங்கமும் நடத்தப்பட்டது.<br>• பெண்களை இரவு நேர சேவையில் ஈடுபடுத்துவதன் நிபந்தனைகள் மீறப்பட்டமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற 09 முறைப்பாடுகள் சம்பந்தமாக இவ்வருடத்தில விசாரணைகள் நடத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டன.<br>• பெண்களுக்கு ஏற்புடைய சட்டங்கள் குறித்து பணிபுரியும் பெண்களுக்கான 12 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதோடு அதன்மூலம் 418 பெண் ஊழியர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். பெண்களை வலுவூட்டுவதன் மூலம் சட்ட மீறல்களைத் தடுக்க இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. |
| | | 5.6 இ. | பால்நிலை சமத்துவம் மற்றும் அனைத்து மட்டங்களிலும் பெண்களையும் சிறுமிகளையும் வலுவூட்டுவதற்காக சாதகமான கொள்கைகளை பயன்படுத்துதல், மற்றும் வலுவூட்டுதல் மற்றும் சட்டத்தை செயல்படுத்துதல் | .5 இ1. | பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டுவதனை இனங் காண்பதற்காக மற்றும் அரச நிதி ஒதுக்கீடுகளை கொண்ட முறைகள் காணப்படுகின்ற நாடுகளின் எண்ணிக்கை | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
